விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 07 புதன்கிழமை (20.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829. ஒலி 122

ராம்கோ RAMCO

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கை ஊடகங்களில் வெளிவந்தது

# ஐ.நாவின் முழுமையான அறிக்கையல்ல

## 196 பக்கங்களைக் கொண்டது என்கிறார் பேச்சாளர்



(நியூயோர்க்)

இலங்கையின் நாளிதழ்களில் வெளியான இலங்கை உள்நாட்டுப் போர் தொடர்பான ஐ.நாவின் நிபுணர் குழு அறிக்கை உண்மையானதே என்றும், ஆனால் அது முழு அறிக்கையும் அல்ல என்றும் அது 196 பக்கங்களைக் கொண்டது என்றும் ஐ.நா. பேச்சாளர் பர்ஹான் ஹக் கூறியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கையால் குற்றவாளிக் கூண்டில் அரசாங்கம்

### மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவின் அறிக்கை இலங்கை அரசாங்கத்தை குற்றவாளி கூண்டில் நிறுத்தியுள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.நிபுணர் குழுவின் இலக்கை அறிக்கை தொடர்பில் கருத்து தெரிவித்த மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

விடுதலை புலிகளுக்கு எதிரான யுத்த வெற்றியை தமிழ் மக்களுக்கு எதிரான வெற்றியாக முன்னெடுத்து சர்வதேசத்தை பகைத்துக் கொள்வதா அல்லது ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளே தமிழ் மக்களுக்கு சுயாட்சியை வழங்குவதன் மூலம் உலகத்துடன் இணக்கமாக செல்வதா என்பதை இந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## 12 அரச சார்பற்ற நிறுவனங்களுக்கே

# அபிவிருத்தியை முன்னெடுக்க அரசு அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று நடைபெற்றது.

யாழ்.மாவட்ட செயலக மண்டபத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வேலைத்திட்டங்கள் குறித்து பரிசீலிப்பது மற்றும் ஆய்வு செய்வதற்காகவே இவ்வொருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட இரு மாவட்டங்களின் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் மனிதாபிமான அபிவிருத்தி பணிகள், அரச திணைக்களங்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார திட்டங்கள் தொடர்பிலும் துறைசார்ந்தோரால் விளக்கமளிக்கப்பட்டன. முக்கியமாக உயர் பாதுகாப்பு வலயம் விடுவிக்கப்படுவது மற்றும் மீள் குடியேற்றம் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டதுடன் எதிர்காலத்தில் பணிகளை முன்னெடுக்கும் போது ஏற்படும் சாதக பாதக நிலைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக யாழ். மாவட்ட அரச அதிபர் (20ஆம் பக்கம் பார்க்க)

# பொன்சேகாவை விடுதலை செய்தால் அரசுடன் இணைந்து செயற்பட தயார்

### ஐ.தே.கட்சி நிபந்தனை

(கொழும்பு)

சரத் பொன்சேகாவை அரசு விடுதலை செய்தால் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் அரசுடன் இணைந்து செயற்பட நாம் தயார் என்று ஐ.தே.கட்சி எம்.பி தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய தயாசிறி ஜெயசேகர இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக அரசின் பதிலை நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம். அதன் பின்னரே இந்த அறிக்கை தொடர்பில் நாம் எமது பதிலை தெரிவிப்போம்.

அது எப்படி இருப்பினும் எமது நாட்டில் உள்ளகப் பிரச்சினையை நாம் முதலில் தீர்த்துக்கொள்ள வேண்டும். எமது நாட்டுப் பிரச்சினைகளை வெளிநாடுகள் சுட்டிக்காட்டும் வரை நாம் பார்த்துக்கொண்டு இருக்கக் கூடாது.

இலங்கையில் ஊடகவியலாளர்கள் கொல்லப்படுகிறார்கள் என்றால் அது தொடர்பாக அரசு விசாரணை நடத்தவேண்டும். அவர்கள் அரசுக்கு எதிராக எழுதினார்களா? அல்லது புலிகளுக்கு எதிராக எழுதினார்களா என்று முதலில் பார்க்க வேண்டும்.

இலங்கையில் நீதித்துறை சரியில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டால் அது தொடர்பில் அரசு ஆராய்ந்து பார்க்க (20ஆம் பக்கம் பார்க்க)



பங்களாதேஷுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ அந்நாட்டில் பல்வேறு இடங்களையும் சென்று பார்வையிட்டு வருகின்றனர். இந்நிலையில் விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்காக டாக்கா நகரில் அமைக்கப்பட்டுள்ள ப்ரோயாஷ் பாடசாலைக்கு சென்ற ஜனாதிபதியின் பாரியார் அங்கு அப் பிள்ளைகளால் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களித்ததுடன் அப் பிள்ளைகளின் தேவைகள் குறித்தும் கண்டறிவதை படத்தில் காணலாம்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


## காணிப் பிணக்கில் முதியவர் அடித்துக் கொலை

நீண்ட நாள் இடம்பெற்ற காணித் தகராறு காரணமாக முதியவர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்ட சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் மல்லாகத்தைச் சேர்ந்த சிவராசா அழகரத்தினம் (வயது 64) என்ற முதியவரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவது,

பண்ணாகம் பகுதியில் உள்ள காணியின் உரிமை தொடர்பாக கடந்த நான்கு மாதங்களாக பிணக்கு ஏற்பட்டு வந்தது. தெல்லிப்பழை இணக்க சபையில் இது தொடர்பாக வழக்கும் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதன் தீர்ப்பு கடந்த 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையே வழங்கப்பட்டது. முதியவரிடம் காணியை இணக்க சபை ஒப்படைத்ததை பொறுத்துக் கொள்ள முடியாத குறித்த நபர் இவ்வாறு முதியவரை அடித்து கொலை செய்துவிட்டு தலைமறைவாகியுள்ளார்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய நபரை தெல்லிப்பழை பொலிஸார் தேடி வருகின்றனர்.

முதியவரின் சடலத்தை மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி கஜநிதிபாலன் பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்குட்படுத்துமாறு உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை இடம்பெற்று சடலம் அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-6)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)


## பங்களாதேஷுடன் இலங்கை 5 ஒப்பந்தங்களில் கைச்சாத்து

(கொழும்பு)

பங்களாதேஷிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சென்ற மகிந்த ராஜபக்ஷ இலங்கைக்கும் பங்களாதேஷிற்கும் இடையில் ஐந்து ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

விவசாயம், கல்வி, கால்நடை வளம் மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு ஆகிய துறைகளின் கீழ் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

பங்களாதேஷிற்கு விஜயம் செய்துள்ள இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா முன்னிலையில் இரு நாட்டு பிரதிநிதிகளும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும், பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவிற்கும் இடையில் நேற்று முன்தினம் மாலை விசேட பேச்சு வார்த்தை நடைபெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ச-5)



யாழ்.கிளிநொச்சி மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன் போது யாழ்.மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிமனையால் மாவட்ட அபிவிருத்தி தொடர்பான நூல் வெளியிடப்பட்டது. இதில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடமிருந்து பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.எஸ்.டக்ளஸ் தேவானந்தா நூலைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

## அமெரிக்காவும் இந்தியாவுமே அறிக்கைக்கு பதில் கூற வேண்டும்

### இடதுசாரி முன்னணி தெரிவிப்பு

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு இந்திய காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுமே பொறுப்புக்கூறவேண்டும். ஏனெனில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அவர்கள் தான் அரசுக்கு ஆயுதம் வழங்கி யுத்தத்தை முன்னெடுக்க உதவினர். அதுமட்டுமன்றி இந்தியாவினதும் அமெரிக்காவினதும் தாளத்துக்கு அமையவே இலங்கை அரசு அப்போது ஆடியது என்று புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு,

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வன்னியில் அப்பாவிப் பொதுமக்கள் நாளாந்தம் கொல்லப்பட்டனர். சர்வதேசத்துக்கு எப்பொழுதாவது அடிபணியவேண்டிய நிலை ஏற்படும் என்று நாம் அரசுக்கு அப்போதே தெரிவித்திருந்தோம். ஆனால் எமது கருத்துக்கு அரசு செவிசாய்க்கவில்லை.

மாறாக எமக்கு புலி முத்திரை தான் குத்தப்பட்டது. விமான நிலையத்தில் வைத்து என்மீது தாக்குதல் கூட நடத்தினர். நாம் கூறியதை அரசு கேட்டிருந்தால், இன்று சர்வதேசத்துக்கும் அடிபணியவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

அரசு சர்வதேசத்தின் அழுத்தங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டுமானால் உடனடியாக அவசரகாலச் சட்டத்தை நீக்கி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைவிடுதலை செய்யவேண்டும்.

மீள்குடியேற்றத்தைதுரிதப்படுத்தி தமிழ் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவேண்டும். அத்துடன் அவர்களின் உடனடிப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

இவ்வாறெல்லாம் அரசு செய்யுமானால் அதன் மீதுள்ள சர்வதேச அழுத்தம் குறையும். இப்படி அவர் தெரிவித்தார். (ச-5)

## ஈழத்தமிழ் மக்களுக்காக இளம்பொறியியலாளர் தீக்குளித்து தற்கொலை

(சென்னை)

அரசாங்கம் ஈழத் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இனப் படுகொலை மற்றும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் ஒடுக்குமுறை நடவடிக்கைகளால் தமிழகத்தில் இளம் பொறியியலாளர் ஒருவர் தீக்குளித்து மரணமடைந்துள்ளதாக தெரிய வருகின்றது.

நெல்லை மாவட்டம் சங்கரன் கோயில் அருகே அமைந்துள்ள சீகம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ராமசுப்பு என்பவரின் மகன் கிருஷ்ணமூர்த்தி (வயது-25) என்பவரே விடுமுறையில் தனது கிராமத்திற்கு சென்றிருந்த வேளையில் ஈழத் தமிழ் மக்களுக்காக இவ்வாறு தீக்குளித்துச் மரணமடைந்துள்ளார்.

விடுமுறையில் தனது கிராமத்திற்குத் திரும்பிய கிருஷ்ணமூர்த்தி ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் தமிழர் தாயகப் பகுதிகளில் இடம் பெற்று வரும் ஒடுக்குமுறை குறித்தும் நண்பர்களுடன் விவாதித்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற போரின் போது இலங்கைப் படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து ஊடகங்களுக்கு கசிந்த நிபுணர்கள் குழுவின் அறிக்கையைப் படித்த இவர் மிகவும் வேதனையடைந்துள்ளார்.

இந்நிலையில் இவர் நேற்றுத் தனக்கு தானே தீ மூட்டிக்கொண்டு ஓடியபோது அவரது தாய், தந்தை மற்றும் சிலர் அவரைக் காப்பாற்ற முயற்சிசெய்தனர். எனினும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

## நாயுடன் மோதி இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் நாயுடன் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7மணியளவில் நுணாவில் வைரவர் கோவிலடியில் இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.யோகராஜா (வயது-22) என்பவரே படுகாயமடைந்தவராவார். (எ-6)

## கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைந்த மாதிரி பண்ணையாளர் சி.க.கூ. சங்கம்

### விசேட பொதுக்கூட்டம்

பொதுக்கூட்டம் 26.04.2011 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கிளிநொச்சி பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு சகல அங்கத்தவர்களையும் தவறாது தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- செயலாளர்-

(சி-3036)

## மரண அறிவித்தல்

### அமரர் எந்திரிக் றொசலின்

கொலொன்னவை பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் எந்திரிக் றொசலின் 17.04.2011 (ஞாயிற்றுக்கிழமை) இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற எந்திரிக் லைசா தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்ற ஓவசியர் பொன்னுத்துரை நாகம்மா தம்பதியினரின் வளர்ப்பு மகளும், திருமதி ஜெகதீஸ்வரி சண்முகநாதன் (கொழும்பு), பொன்னுத்துரை கெங்காதரன் (தலைவர்-யாழ்.பேருந்து உரிமையாளர் சங்க்ங்களின் இணையம்), திருமதி துஷ்யந்தி சுதந்திரரூபன் (பிரான்ஸ்), பொன்னுத்துரை கிரிகரன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.04.2011 (இன்று புதன்கிழமை) மதியம் 12 மணியளவில் அவரது வசிப்பிடமான 'ஜெகதர பவனம்' சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
**பொன்னுத்துரை கெங்காதரன்**
(தலைவர்-யாழ்.பேருந்து உரிமையாளர் சங்கங்களின் இணையம்)
T.P: 0770690806 (4632)

## பெயர் மாற்றம்

சாவகச்சேரி சங்கத்தானையை சேர்ந்த துரையப்பா தர்மகுலசிங்கம் ஆகிய நான் 20.04.2011 இல் இருந்து **துரையப்பா சிங்கராஜன்** என்று பெயர் மாற்றம் செய்துள்ளேன்.

(4625) **து.சிங்கராஜன்**


ஆனந்தி திருமண சேவை

**மணமகள் தேவை**

பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரியும் 1973-ல் பிறந்த பூராட நட்சத்திரம் கிரக பாவம் 32 1/4 செவ்வாய் தோஷம் குறைந்த மணமகனுக்கு உள்ளூர் பெண்மணி, உத்தியோகம் பார்க்கும் ஆசிரியையாக (வலிகாமப் பிரதேசம் எனின் விரும்பத்தக்கது) இருத்தல் நன்று. சீதனம் பேசித்தீர்க்கலாம். தபால், நேரடியாக, தொலைபேசி (021 2228708) மூலம் தொடர்பு கொள்க.

V.A.**சிவராசா (ஜோதிடர்)**
**56, அம்மன் றோட்**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
(4620)


## உளம் கனிந்து வாழ்த்துகின்றோம்



கல்விப் பணிப்பாளராக, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக, அர்ப்பணிப்பு சிந்தையுடன் உயர் சேவையாற்றி இன்று வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக உயர்ந்து உயர்ந்து மேலுயர்ந்து நிற்கும் எமது பேரன்பிற்குரிய

**உயர்திரு. வே.தி.செல்வரத்தினம் (S.L.E.S - I) அவர்களின்**

பயனுறு சேவை மலரவும், அவர் புகழோங்கவும் மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

நல்லூர்க் கோட்டம் கோட்டக்கல்வி பணிப்பாளர், அதிபர்கள்

(4634)

# இன்று ஒரு தகவல்

## மனமும் குரங்கும்

ஒரு சமயம் பெர்னாட்ஷாவைப் பார்த்து "உலகம் ஏன் உங்களைச் சிந்தனையாளர் என்று பாராட்டுகிறது?'' என்று கேட்டார்களாம்.

அதற்கு அவர் "ஒரு வருடத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைக்கு மேல் யாருமே சிந்திப்பது கிடையாது... நான் வாரத்தில் ஒரு தடவை அல்லது இரண்டு தடவை சிந்திக்கின்றேன். அதனால் தான் உலகம் என்னைச் சிந்தனையாளர் என்று பாராட்டுகிறது.'' என்றாராம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

மனிதர்கள் யாருமே அதிகம் சிந்திப்பதில்லை.

மனம் சுத்தமாக இருக்கவேண்டும். அப்போதுதான் சிந்தனையும் தெளிவாக இருக்கும். மனம் எந்த அளவுக்கு சுத்தமாக இருக்கவேண்டும் என்று தெரியுமா?

அதற்கு மாஸ்க் அரேலியஸ் என்ற அறிஞர் ஒரு அளவு கோல் கொடுத்திருந்தார்:

"திடீரென்று உங்கள் முன்னால் ஒருவர் வந்து நின்று நீங்கள் இப்போது என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்... அப்படியே சொல்லுங்கள்!'' என்று கேட்டால் உடனே தயங்காமல் உள்ளது உள்ளபடியே... இதைத்தான் இப்போது நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்று சுலபமாகச் செல்லக் கூடிய அளவுக்கு மனம் இருக்க வேண்டும். அதுதான் சுத்தமான மனம்'' என்கிறார் அவர்.

அப்படிச் சொல்லக்கூடிய நிலையிலா நாம் இருக்கிறோம்? "வெளிப்படையாகப் பேசுங்க சேர்.'' என்று கேட்டால்... "அது எப்படி சேர்...?'' மனதில் நினைப்பதையெல்லாம் வெளியில் காட்டிக் கொள்ள முடிகிறதா?'' என்றுதானே கேட்கிறோம்.

பிறகு எப்படி மனம் சுத்தமாக இருக்கும்?

நம்மில் பலர் மனதை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறோம். ஆனால் அது முடிவதில்லை... மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

சும்மாவா சொன்னார்கள் 'மனம் ஒரு குரங்கு மாதிரி என்று?' அது சரி... மனதிற்கும் குரங்கிற்கும் அப்படி என்ன சம்பந்தம்?

இரண்டும் அடிக்கடி தாவிக் கொண்டிருக்கிறது. இதுதான் நமக்குத் தெரிந்த ஒற்றுமை.

என்னுடைய நண்பர் ஒருவர்... இதற்கு இன்னொரு விளக்கம் கொடுத்தார்.

"மனம்- குரங்கு இந்த இரண்டையுமே எப்போதும் கட்டுப்படுத்தியே வைத்திருக்க வேண்டும்... இல்லாவிட்டால் நமக்குத்தான் கஷ்டம்'' என்றார். எப்படி என்றேன். அதற்கு அவர் சொன்ன கதைதான் இது.

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் தன்னுடைய அரண்மனையில் ஒரு குரங்குக் குட்டியை வளர்த்து வந்தார். அந்தக் குரங்கு ஒரு சுவரோரமாக ரொம்ப சாதுவாக உட்கார்ந்திருக்கும். அப்படியிருந்தாலும் கூட அந்த ராஜா தினமும் ஒரு குச்சியால் அதற்கு இரண்டு அடி கொடுப்பார். அந்த அடியை வாங்கிக் கொண்டு.. குரங்குக் குட்டி அங்கே கிடக்கும். ஆகாரத்தையும் சாப்பிட்டுக் கொண்டு ரொம்ப சாதுவாக காலம் தள்ளிக் கொண்டிருந்தது.

அந்த ராஜாவுக்கு புதிதாக ஒரு மந்திரி வந்து சேர்ந்தார். அவர் தினமும் ராஜா கூடவே இருப்பார். ராஜா அந்த குரங்குக் குட்டியை அடிப்பதை மந்திரி பார்த்தார். அவர் மனதுக்கு சங்கடமாக இருந்தது.

ஆதலால் அவர், அரசே.... என்னங்க இது அநியாயம்? வாயில்லா ஜீவன்... அதுவுமில்லாமல் அது ரொம்பசாதுவாக ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கிறது... அதைப்போய் தினமும் அடிக்கிறீர்களே! என்று கேட்டார்.

அதற்கு ராஜா "சரி அமைச்சரே! உங்கள் வார்த்தைக்கு நான் மரியாதை கொடுக்கிறேன். இன்றையிலிருந்து இந்தக் குச்சியை கீழே போட்டு விடுகிறேன்'' என்றார். குச்சியைக் கீழே போட்டும் விட்டார். அதன் பிறகு தினமும் மாலையில் ராஜாவும் மந்திரியும் அந்தப் பக்கமாக வருவார்கள்.... போவார்கள்.

ராஜா அடிக்கவில்லை என்று தெரிந்ததும் குரங்கு கொஞ்சம் அசைய ஆரம்பித்தது. அடுத்த நாள் ஓடி விளையாட ஆரம்பித்தது. அதன்பின் ராஜாவிடம் ஓடிவந்து கொஞ்ச ஆரம்பித்தது! அதற்கு அடுத்த நாள் என்ன செய்தது தெரியுமா? ராஜாவின் தோளில் ஏறி உட்கார்ந்து.... அந்தக் குச்சியால் ராஜாவின் காதில் குத்த ஆரம்பித்தது. பார்த்தார் மந்திரி.....

என்ன இது? "ராஜா என்ற மரியாதை இல்லாமல்'' என்று சொல்லி அந்தக் குச்சியை பிடுங்கிக் குரங்கை அடிக்க ஆரம்பித்து விட்டார்.

இப்போது ராஜா மந்திரியைப் பார்த்து, "இதே வேலையைத் தானே நான் ஆரம்பத்திலேயே செய்து கொண்டிருந்தேன்!'' என்று சொன்னார்.

இப்போதுதான் மந்திரிக்கு... 'குரங்கையும் - மனத்தையும் அடக்கி வைத்திருக்கும் வரையில்தான் அடங்கியிருக்கும்' என்ற உண்மை புரிந்தது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரசாங்க முகாமைத்துவ சேவைக்கு மேலும் 2 ஆயிரத்து 700 பேர் உள்ளீர்ப்பு

(கொழும்பு)

அரச முகாமைத்துவ இணைந்த சேவையில் மேலும் 2 ஆயிரத்து 700 பேரை இணைத்து கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

விரைவில் இந்த நியமனங்களை வழங்க உள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத்துறையில் ஐயாயிரம் வெற்றிடங்கள் நிலவுவதுடன் அண்மையில் 2 ஆயிரத்து 330 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

அதன்படி மேலும் 2 ஆயிரத்து 700 வெற்றிடங்களுக்கான நியமனங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்படி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சை மூலம் தெரிவு செய் யப்படுவோரில் இருந்து அடுத்த கட்ட நியமனங்கள் வழங்கப்படுமென அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சையின் பெறுபேறுகள் இதுவரை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு கிடைக்க வில்லை எனவும் பரீட்சைகள் திணைக்களத்திலிருந்து அந்த பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றதும் மீதமுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடியாகவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# வல்வெட்டித்துறையில் நடமாடும் இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை இரத்த வங்கியின் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் வல்வெட்டித்துறை வாழ் மக்கள் நடமாடும் இரத்ததான முகாம் ஒன்றினை நாளை வியாழக்கிழமை வல்வெட்டித்துறை பார்வதி இலவச ஆங்கில கல்வி நிலையத்தில் நடத்தவுள்ளனர்.

இதற்கு வல்வெட்டித்துறை வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தினரும் வல்வை ஒன்றியமும் அனுசரணை வழங்கவுள்ளனர்.

எனவே, இக்கட்டான நேரத்தில் இரத்ததானம் செய்ய விரும்பும் குருதிக் கொடையாளர்கள் மேற்குறித்த நாளில் சமுகளித்து இரத்ததானம் செய்து யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் இரத்த தட்டுப்பாட்டை நீங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# வடமராட்சி வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுவரும் ஆசிரியர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

வன்னி வலயப் பாடசாலைகளில் இருந்து வடமராட்சி வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுவரும் ஆசிரியர்கள் நாளை வியாழக்கிழமை மு.ப 9.00 மணிக்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 85 | 70 | 90 |
| பச்சைமிளகாய் | 80-90 | 120 | 160 |
| தக்காளி | 40-50 | 80 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 120 | 150 | 180 |
| பூசணி | 40 | 50 | 60 |
| புடோல் | 30 | 30 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 150 |
| பெரிய வெங்காயம் | 55 | 80 | 60 |
| பாகற்காய் | 120 | 130 | 160 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | - | 100 | - |
| பயற்றங்காய் | 50 | 40 | 100 |
| லீக்ஸ் | 100 | 80 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 70 |
| கறிமிளகாய் | 120 | 150 | 140 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 500 |
| போஞ்சி | - | 60 | - |
| கத்தரிதம்புள்ள | - | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 130 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 |

# இராசி பலன்

20.04.2011
(சித்திரை 7 ,புதன்கிழமை)
சூரியஉதயம்காலை 6.01 மணிக்கு
திருதியை பின்னிரவு 3.16 மணிவரை
விசாகம் முற்பகல் 11.24 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை

**மேடம்** மனதில் இனம்புரியாத கவலை தோன்றி மறையும், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், கொடுக்கல் -வாங்கல்களில் கவனம் தேவை.

**இடபம்** மகிழ்ச்சியான செய்தி ஒன்று காலைநேரத்திலேயே கேட்கும் சூழ்நிலை உருவாகும், தேவைகளைப்பூர்த்தி செய்து கொள்வீர்கள், நண்பர்கள் வட்டம் விரிவடையும்.

**மிதுனம்** மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர், கூட்டுத்தொழில் கூடிய இலாபம் கிடைக்கும், தேகநலன் புத்துணர்வுடன் காணப்படும், சுவாரஸ்யமான நாள்.

**கடகம்** கல்வி முன்னேற்றம் கருதி ஒரு தொகையைச் செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்வீர்கள்.

**சிங்கம்** தாய்வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், புதிய தொழில் தொடர்பாக ஆர்வம் காட்டுவீர்கள், வாகனயோகத்தால் வளம் காணும் நாள்.

**கன்னி** சுய முயற்சியின் மூலம் சுகம் காணவேண்டிய நாள், வள்ளல்களின் உதவிகள் கிடைக்கலாம், நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரும்.

**துலாம்** விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், விலையுயர்ந்த பொருட்களை வங்கி மகழ்வீர்கள், பேச்சுவார்த்தையால் காரியங்களைச் சாதிப்பீர்கள்.

**விருச்சிகம்** விரும்பிய காரியம் விரும்பிய படியே நடைபெறும் நாள், உறவினரை அனுசரித்து செல்வது நல்லது, பணவரவு திருப்தி தரும், கற்பனைமிகதியுண்டு.

**தனுசு** பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், குல தெய்வவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், சயன சுகக்குறைவுண்டு.

**மகரம்** தனவரவு திருப்திகரமாக அமையும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், எடுத்த காரியம் எளிதில் நிறைவேறும்.

**கும்பம்** அதிக பிரயாசை காட்டுவீர்கள், நல்லவர வேற்புக் கிடைக்கும், நண்பர்களின் உதவியுண்டு, ஆரோக்கியமான நாள், முயற்சி கைகூடும்.

**மீனம்** தடைப்பட்ட காரியங்கள் நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, உறவினர் வழியில் அனுகூல முண்டு.

வளவன்

# அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு கூட்டமைப்பை அழைக்காதது ஏன்?

## சிறிதரன் எம்.பி. கேள்வி



(யாழ்ப்பாணம்)

யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களுக்கு பிரதேச செயலாளர் தமக்கு அழைப்பு விடாதது ஏன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவரினால் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பப்பட்டது.

இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

யாழ்.மாவட்டமாக இருந்தாலும் சரி கிளிநொச்சி மாவட்டமாயிருந்தாலும் சரி முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் பங்கு கொள்ளும் உரிமை எமக்குண்டு.

ஆனால் இவ்விரு மாவட்டங்களிலும் இயங்கிவருகின்ற பிரதேச செயலகங்களில் நடைபெறும் எந்தவொரு அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கும் அழைப்பு விடப்படுவதில்லை.

மக்களின் பிரதிநிதிகளாகவே நாம் செயற்பட்டு வருகின்றோம். மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தீர்மானங்களை எடுக்கும் போது அதனை பக்கச்சார்பானதாக எடுக்கக்கூடாது.

திட்டங்களை நிறைவேற்றும்போது விவாதித்துப் பெறப்படும் முடிபுகள் மூலமே அவை நிறைவேற்றப்படல் வேண்டும்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தமட்டில் யுத்தம் முடிபுற்று பல மாதங்களாகியும் இன்னும் அபிவிருத்தித் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படாமலேயே உள்ளது.

குறிப்பாக பூநகரிப் பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் அப் பகுதியில் மீள் குடியேறிய மக்களுக்கு வீதிப் போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதிகள் என்பன இன்னும் செய்துகொடுக்கப்படவில்லை.

பூநகரி ஆதார வைத்தியசாலை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இன்னும் இருந்து வருகிறது. இதை எப்போது இராணுவம் மக்கள் பாவனைக்கு விடுவிக்கும்?

பூநகரியிலுள்ள ஒருவருக்கு நோய் ஏற்பட்டால் அவரை கிளிநொச்சிக்குக் கொண்டு செல்லவேண்டியுள்ளது. இதற்கு அம்புலன்ஸ் சேவையும் சீரானதாகவில்லை. மக்களை மீள் குடியேற்றுவதற்கு முன் அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுங்கள்.

இவை தவிர போரின் பின்பு இரணைமடுக்குளம், கல்மடுக்குளம் உள்ளிட்ட பல குளங்கள் இன்னும் புனரமைப்புச் செய்யப்படாதுள்ளது.

மேலும் இந்தியாவினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டம் உரியமுறையில் மக்களைச் சென்றடையவில்லை எனவும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் குற்றம் சாட்டியுள்ளார். (ச-6)

## ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம்

# சிறந்த கழக அணித் தெரிவில் யாழ்.பல்கலை அணி முன்னிலை

(யாழ்ப்பாணம்)

ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2வது ஆண்டாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணி தெரிவிற்கான நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக அணி முன்னிலையில் உள்ளது.

யாழ்.பல்கலைக்கழக அணி 7போட்டிகளில் பங்குபற்றி 5 போட்டிகளில் வெற்றி பெற்று 20புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தில் உள்ளது. கே.சீ.சீ.சீ. அணி 6 போட்டிகளில் பங்குபற்றி 4 போட்டிகளில் வெற்றி பெற்று 13 புள்ளிகளைப் பெற்று 2-ம் இடத்திலும் ஸ்கந்தா ஸ்ரார் கழக அணி 4 போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டியில் வெற்றிபெற்று, சென்றலைட்ஸ் கழக அணி 2 பேட்டிகளில் பங்குபற்றி இரண்டிலும் வெற்றி பெற்று, சிறி காமாட்சி கழக அணி 3 போட்டிகளில் பங்குபற்றி இரண்டில் வெற்றிபெற்று, கிறாஸ்கொப்பர்ஸ் கழக அணி 3 போட்டிகளில் பங்குபற்றி இரண்டில் வெற்றிபெற்று தலா 10 புள்ளிகளை பெற்று 3-ம் இடத்திலும் உள்ளன.

யாழ்.மத்திய கல்லூரியில் அதிபராக கடமையாற்றியவரும், யாழ். நகரிலே முதன் முதல் துடுப்பாட்டத்தை அறிமுகப்படுத்தயவரு மாகிய ஜோர்ஜ் வெப்ஸ்ரர் அவர்களைக் கௌரவிக்கும் முகமாக யாழ்.சென்றல்

# வடமராட்சியில் மீனவர்கள் இருவர் கரை திரும்பாததால் பதற்றம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை ஆதி கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த இரு மீனவர்கள் கடலுக்குச் சென்று கரை திரும்பவில்லை என்று வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது.


சம்பவம் தொடர்பாக மேலும்தெரியவருவதாவது,

கடலுக்குச் சென்ற இரு மீனவர்கள் இதுவரை கரைக்குத் திரும்பவில்லை. இச் சம்பவத்தில் அப் பகுதியைச் சேர்ந்த சகோதரர்களான பாபு பிரபாகரன் (வயது- 26), பாபு சசிகரன் (வயது- 21) என்ற இருவருமே காணாமற் போயுள்ளனர். இவர்களைத் தேடும் பணியில் ஆதிகோவிலடியைச் சேர்ந்த கடற் தொழிலாளர் சங்கத்தின் ஐந்து படகுகளை தேடுதற் பணிக்காக கடலுக்குள் அனுப்பிவைத்துள்ளதாக ஆதிகோவிலடி கடற்றொழிலாளர் சங்க செயலாளர் தெரிவித்தார். (ச-6, 24)

# மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் பழம் வீதி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவ சுவாமி தேவஸ்தான பரிவார மூர்த்திகள் பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 9.39 மணிமுதல் 12.20 மணிவரை நடைபெறவுள்ளது. (எ)



'ஈழத்து இராமேஸ்வரம்' என அழைக்கப்படும் புங்குடுதீவு ஊரதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தான மகோற்சவம் கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமானது. இதில் பாணாவிடைச் சிவன், பிள்ளையார், முருகன் சகிதம் வெளி வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.

# லிபியாவுக்கு படையினரை அனுப்ப ஐரோப்பிய ஒன்றியம் முடிவு!

ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்தால் லிபியாவில் மனிதாபிமான உதவிகளுக்காக படை நடவடிக்கையை மேற்கொள்வதற்காக படையினரை அனுப்புவதற்கு தயாராகவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை உயர் ஸ்தானிகராலயத்தின் பிரதம பேச்சாளர் கைம்கல் மான் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

எவ்வளவு படையினர் அனுப்பப்படுவர் என்ற விபரத்தை அவர் தெரிவிக்காத போதிலும் நிச்சயமாக ஆயிரத்திற்கும் குறைந்த எண்ணிக்கையிலான படையினரே அனுப்பப்படுவர் என அவர் கூறினார்.

இடம்பெயர்ந்த மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுதல், மனிதாபிமான உதவிகளுக்கான வாகனத் தொடரணிகளுக்கு பாதுகாப்பளித்தல் போன்றவற்றில் மனிதாபிமான முகவர் நிறுவனங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் படையினர் உதவுவார்கள் என அவர் குறிப்பிட்டார்.

இந் நடவடிக்கைகளுக்கு ஈயூ போர் லிபியா என பெயரிடப்பட்டுள்ளது. இதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

லிபியாவில் கேணல் கடாபியின் படைகளுக்கு எதிராக நேட்டோ அமைப்பு விமானத் தாக்குதல்களை நடத்தி வருகிறது. எனினும் லிபியாவுக்கு தரைப் படைகளை அனுப்பும் சாத்தியத்தை மேற்குலக நாடுகள் முன்னர் நிராகரித்திருந்தன.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் படையினர் தமக்கு அல்லது மனிதாபிமான உதவி நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் தவிர மோதல்கள் எதிலும் ஈடுபட மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# குடிசன மதிப்பீட்டுக்கான ஆரம்பகட்ட தகவல் சேகரிப்புகள் வடபகுதியில் துரிதம்

(கொழும்பு)

இவ்வருடம் இடம்பெறவுள்ள குடிசன மதிப்பீட்டுக்கான ஆரம்பகட்ட தகவல் சேகரிப்புகள் வடபகுதியில் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் ஒக்டோபர் அல்லது செப்டெம்பர் மாதத்தில் இந்த வருடத்திற்கான குடிசன மதிப்பீடு தேசிய ரீதியாக இடம்பெறவுள்ளது.

அதற்கு முன்னேற்பாடாக வரைபடம் தயாரிக்கும் கட்டம் நிறைவடைந்துள்ளதைத் தொடர்ந்து மக்கள் வசிப்பிடக் கூறுகளை அடையாளப்படுத்தும் செயற்பாடு இடம்பெற்று வருகிறது.

கடந்த 1981ஆம் ஆண்டின் பின்னர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் குடிசன மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெறவில்லை. தற்போது 30 வருடங்களின் பின்னர் இந்தப் பகுதிகளில் இந்த வருடம் குடிசன மதிப்பீடு இடம்பெறவுள்ளது.

அதற்கு முன்னேற்பாடாக குடிசன வாழ்விட வரைபடம் தயாரிக்கும் கட்டம் நிறைவடைந்து வடபகுதியில் தற்போது மக்கள் வாழ்விடக் கூறுகளை அடையாளப்படுத்தும் செயன்முறைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. கிராம அலுவலர்களினால் மக்கள் வாழ்விடக் கூறுகள் ஸ்ரிக்கர் ஒட்டி அடையாளப் படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பணி இந்த மாதத்தினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று மாவட்ட செயலக புள்ளிவிபரத் திணைக்களத்தால் கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குடிசன மதிப்பீட்டுக்கான ஆரம்ப கட்டப் பணிகள் வடக்கு, கிழக்கில் கடந்த 2001ஆம் ஆண்டு இடம்பெற்றன. எனினும் அந்த மதிப்பீட்டுக்கான இறுதிக்கட்டப் பணிகள் பின்னர் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)

# மாதாந்த ஆய்வரங்கம்

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு (சொண்ட்) யாழ்.குடாநாட்டில் கற்றோர் சமூகத்தில் சிந்தனையைத் தூண்டவும் அபிவிருத்தியில் பங்களிப்பை பெறும் பொருட்டும் மாவட்டம் தழுவிய பொதுப் பிரச்சினைகளைப் கருப்பொருளாகக் கொண்டு மாதாந்தம் ஆய்வரங்கு ஒன்றை நடத்தி வருகின்றது.

இதற்கமைய "யாழ்.மாவட்ட பொருளாதார மேம்பாட்டிலும் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதிலும் வங்கித்துறையின் பங்கு" எனும் கருப்பொருளில் இலங்கை மத்திய வங்கியின் வடமாகாணமுகாமையாளர் ல.சிறிதரன் ஆய்வுரை ஒன்றை எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு இல.60, அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள சொண்ட் நிறுவனத்தில் நடத்தவுள்ளார்.

எனவே பங்குபற்றுநரின் கலந்துரையாடலுக்கு ஒரு மணிநேரம் ஒதுக்கப்படுவதோடு நிகழ்வில் பங்குபற்றித் தங்கள் கருத்துகளையும் முன்வைக்குமாறு நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# மொழிகளைக் கற்றுக்கொள்வதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

ஏனைய மொழியைக் கற்றுக் கொள்வதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியும் என மீன்பிடி வள அமைச்சர் கலாநிதி ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழி தெரியாது என்று கூறுவது உண்மையில் வெட்கப்பட வேண்டிய விடயமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளை மட்டும் தெரிந்து வைத்திருப்பதில் பயனில்லை என அவர் தெரிவித்துள்ளார். அண் [illegible] மயில் நடைபெற்ற மொழிப் பயிற்சி மற்றும் அடிக்கல்நாட்டு விழா ஒன்றில் கலந்துகொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் ஏனைய இன மக்களின் மொழிகளை அறிந்து வைத்திருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். இவ்வாறு மொழியறிவு காணப்பட்டால் ஏனைய இனங்களுக்கிடையில் நல்லுறவு ஏற்பட வாய்ப்பிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இடம்பெற்ற பாரிய அழிவிற்கு மொழிப் பிரச்சினை ஓர் பிரதான காரணி என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேற்குலக நாடுகளின் தலையீடுகளை முறியடிப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஶ்ரீ-2)

# ஐ.நா.பாதுகாப்பு பேரவையில் நிபுணர்குழு அறிக்கை குறித்து விவாதிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை அந்த அமைப்பின் பாதுகாப்புப் பேரவையில் விவாதிக்கப்படவுள்ளதாக இன்னர் சிற்றி பிரஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் சிரேஷ்ட அரசியல் விவகார அதிகாரி லியாம் பொஸ்கோவை மேற்கோள் காட்டி இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை, கட்டார் மற்றும் எகிப்து விவகாரங்கள் குறித்து பாதுகாப்புப் பேரவையில் விவாதம் நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

2009ஆம் ஆண்டில் கொஸ்டரிக்கா மற்றும் மெக்ஸிக்கோ ஆகிய நாடுகள் இலங்கைக்கு எதிராக பாதுகாப்புப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற முயற்சித்த போது சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் அதற்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

எவ்வாறெனினும் 2011ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவையில் இலங்கை விவகாரம் விவாதிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமாகக் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஶ்ரீ-2)

# மணவாளக் கோல விழா

கோப்பாய் அருள்மிகு ஶ்ரீ வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில் மணவாளக் கோல விழா நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விநாயகப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு விசேட அபிஷேகமும் நடைபெறும். மாலை 6 மணிக்கு விசேட பூசையும் திரு ஊஞ்சலும் நடைபெறும். (ஶ்ரீ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**உயர்திரு.வே.தி.செல்வரத்தினம் (S.L.E.A.S.I)**



வடமராட்சி, யாழ். வலயங்களின் கல்விப் பணிப்பாளராகவும், யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி வடக்கு மாகாண கல்வியமைச்சின் பிரதிச் செயலாளராகப் பதவி உயர்வு பெற்ற சேவையின் செம்மல், மும்மொழித் தேர்ச்சியாளன், கல்விக் கண்ணாளன் உயர்திரு. *வே.தி.செல்வரத்தினம்* (S.L.E.A.S.I) அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர்கள்: க.க.யோகநாதன், அ.சா.அரியகுமார், க.சண்முகராஜா, கா.ராமஜயம், க.சுப்பிரமணியம், ச.நவரத்தினம், பா.இரகுநாதன்.

(சி-3034)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளராகவிருந்து அளப்பரிய கல்விச் சேவையாற்றி வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராகப் பதவி உயர்வு பெற்ற எனது அன்பிற்கும் பெருமதிப்பிற்குரிய **உயர்திரு.வே.தி.செல்வரத்தினம்** ஐயா அவர்களை மனதார வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றேன். ***அன்பினால் எதனையும் சாதிக்கலாமென்ற*** வாசகத்தில் நம்பிக்கையுடன் செயற்படும் அவர், 2010 மார்கழி 26ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் கொண்டாடப்பட்ட தேசிய பாதுகாப்பு (அனர்த்தம்) தினம் சிறப்புற 25 பாடசாலைகளின் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தித்தந்ததோடு எனக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்த அப்பெருமகன் நல்ல தேகாரோக்கியத்தோடு இன்னும் பல உயர்வுகள் பெற்று நீடூழிவாழ எல்லாம் வல்ல கிளிநொச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரானை இறைஞ்சி நிற்கின்றேன்.



**க.வைரமுத்து**

**முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளரும் தற்போதைய யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளரும்.**

(4631)


# ஆற்றில் நீராடச் சென்ற மூவர் நீரில் மூழ்கி பலி

நுவரெலியா பதியபெலல்ல பிரதேசத்தில் உள்ள பேலிஹுல் ஆற்றில் நீராடச் சென்ற மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

கொழும்பைச் சேர்ந்த யுவதி ஒருவர் உட்பட 3 பேர் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக மத்துரட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் பதியபெலல்ல பிரதேசத்தில் உள்ள தமது உறவினர்களின் வீட்டுக்கு சென்றிருந்த நிலையில் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

நீரில் மூழ்கியவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஶ்ரீ-2)

# இராஜகோபுரம் குடமுழுக்கு வைபவம்

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய இராஜகோபுர குடமுழுக்கு வைபவம் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையிலான சுபவேளையில் நடைபெறவுள்ளது. (ஶ்ரீ-3-10)


## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

**புவனேஸ்வரன் பத்மாவதி**

மலர்வு 22.03.1979 — மறைவு 20.04.2009




*அம்மாவிற்கு*
*மண்ணிலிருந்து ஓர் மடல்...*
*அம்மா...!*
*உன் ஆசை முகம்காண*
*பிஞ்சுகள் நாம்*
*தினம் தினம் தவிக்கின்றோம்...*
*ஆலவிருட்சமாய்*
*அருகிருந்து*
*அகிலமதில் நாம் வாழ*
*அரிதாரமிட்டவரே*
*நாம் வாழும் காலம்வரை*
*எம் இதயமதின்*
*தெய்வம் நீரே...*
*உம் ஆத்மா சாந்திபெற*
*இறைவனை*
*வேண்டுகின்றோம்...*

தமிழ்வளர் சோலை,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

(4630)


யாழ்.மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதனையும் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரையாற்றுவதனையும் மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதனையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.கரன்)

## சைக்கிளில் சமாந்தரமாக சென்றோருக்கு அபராதம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் நகரில் சமாந்தரமாக சைக்கிளில் சென்ற 11 பேரை கொடிகாமப் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் நேற்றையதினம் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு தலா 1000 ரூபாய் அபராதம் விதித்து, செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-29)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கனடா வாழ் ஆனந்தி ரஞ்சன் தம்பதியரின் அனுசரணையுடன் நடாத்தப்படும் உரும்பிராய் இலக்குமி முன்பள்ளி மழலைகள் வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு உரும்பிராய் சரஸ்வதி சனசமூக நிலைய முன்றலில் தலைவர் எஸ்.கௌதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழகக் கிளை முகாமையாளர் ஆ.சத்தியமூர்த்தி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யா/கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் ஓய்வு பெற்ற அதிபர் அ. பஞ்சலிங்கம், யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய ஓய்வு பெற்ற உப அதிபர் திருமதி திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3)

## போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியவாண்மை விருத்தி நிறுவனத்தினால் நடாத்தப்படவுள்ள SLEAS போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் செயலமர்வு எதிர்வரும் 22, 23, 24ஆம் திகதிகளில் யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக ஆசிரியவாண்மை விருத்தி நிர்வாகப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

## நிர்வாகசபைக் கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாச நிர்வாக சபைக்கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற மாநாட்டு மண்டபத்தில் சமாசத் தலைவர் க.கஜீதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சகல அங்கத்தவர்களையும் கலந்து கொண்டு தகுந்த ஆலோசனைகளை வழங்கி உதவுமாறு சமாசச் செயலாளர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

## தவக்கால வழிபாடும் உயிர்த்த கிறிஸ்துவின் சொரூப பவனியும்

புனித யாகப்பர் ஆலய தவக்கால வழிபாடுகள் பெரிய வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பெரிய வெள்ளிக்கிழமை வழிபாடு முடிவில் இயேசு கிறிஸ்து சொரூபம் சிலுவையில் மரணிக்கும் நிகழ்வு இயங்குநிலையில் காண்பிக்கப்படவுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினம் காலை 5.30 மணிக்கு புதுமை மாதா ஆலயத்திலும் 7 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு உயிர்த்த கிறிஸ்துவின் சொரூபம் வீதியுலா வரவுள்ளது. (ஸ்ரீ-3-39)

## கரவெட்டி கோட்டக்கல்வி பணிப்பாளர் நியமனம்

(அல்வாய்)

கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளராக சி.நற்குணலிங்கம் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஆவார். தற்போது கரவெட்டி பிரதேசசபையின் தவிசாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

இதேவேளை கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய த.தபேந்திரராஜா ஓய்வு பெற்றமையையடுத்தே அவ்வெற்றிடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-3-19)

## பாலியல் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய நபருக்கு ஒரு வருட கடூழியச் சிறை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மட்டுவில் வடக்குப் பகுதியில் 21 வயது பெண்ணொருவரைப் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தியதாகக் கடந்த 2009ஆம் ஆண்டு ஜூன் 2ஆம் திகதி சாவகச்சேரி பொலிஸாரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கின் விசாரணை நேற்றைய தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா சந்தேக நபரைக் குற்றவாளியாகக் கண்டு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனையும் 1500 ரூபாய் தண்டப் பணமும் விதித்து செலுத்தத் தவறின் ஒரு மாதகால சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-29)

## அனுமதிப் பத்திரமின்றி வடிசாராயம் விற்பனை செய்த மூவருக்கு அபராதம்

(சாவகச்சேரி)

அனுமதிப்பத்திரம் இன்றி வடிசாராயம் விற்பனை செய்த மூன்று நபர்களை சாவகச்சேரி மதுவரி திணைக்களத்தினர் கைது செய்து நேற்றைய தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மூவருக்கு தலா முறையே 2000, 2500, 2500 அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-29)

## பருத்தித்துறை நகரசபையின் புதிய செயலாளராக செவ்வேள் நியமனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகர சபையின் புதிய செயலாளராக ந.செவ்வேள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இன்று புதன்கிழமை முதல் தமது கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார்.

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் பிரதம முகாமை உதவியாளராகவிருந்த இவர் பதவியுயர்வுடன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, முன்னர் சபைச் செயலாளராக இருந்த அ.நடராசா ஓய்வு பெற்றதையடுத்தே இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-10)

## வடமராட்சி வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

எனவே பிரதேச திணைக்கள தலைவர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் தவறாது சமுகமளித்து ஒத்துழைக்கும்படி வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

## ஆங்கிலப் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்.பல்கலைக்கழகத்துடன் இணைந்து தெரிவு செய்யப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் அல்லாத ஆசிரியர்களுக்கு நடத்தப்படவிருக்கும் 10 மாத ஆங்கிலப் பயிற்சிநெறிக்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 30ஆம் திகதி யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பா., கிளி/கிளிநொச்சி ம.வி., வ/சைவப்பிரகாச ம.வி., மன்/சென்.சேவியர் பெண்கள் கல்லூரி ஆகிய நிலையங்களில் காலை 9.30 மணி தொடக்கம் 11.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இதற்காக விண்ணப்பித்த ஆசிரியர்களை பரீட்சைக்கு அன்றைய தினம் அருகிலுள்ள நிலையங்களுக்குச் சென்று பரீட்சைக்குத் தோற்றுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சிநெறியில் பங்குகொள்ள விரும்பும் வேறு ஆசிரியர்களும் இத்தெரிவுப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)




## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் சத்திரம் அருள்மிகுஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான் மஹா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை முற்பகல் 9.39 மணிமுதல் 11.20 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

இதில் எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை நடைபெறும். (ஸ்ரீ-3)

# கோடை காலமும், பழங்களின் மருத்துவ பண்பும்

### பனம்பழம்

✦ பழத்தின் நாரில் உள்ள குழம்பைச் சப்பி மென்று சாறை மட்டும் கிரகித்துத்தான் சாப்பிட முடியும்.




✦ இதனைபச்சையாகவும்சுட்டும்அவித்தும் சாப்பிடலாம்.இது இனிப்புச் சுவையுள்ளது. இதனால் எந்தவித கெடுதலும் வராது.

✦ பனஞ்சாறு, பனங்கள், பனங்கற் கண்டு, பனையிருந்து இறக்கப்படும் பனஞ் சாறு அல்லது பதநீர் மருந்துக்கு பயன்படுத் தப்படும்.

✦ புளிக்காத பனஞ்சாற்றை காலையில் அருந்த சக்தி அதிகரிக்கும். சிறுநீர் பெருகும். ஆரோக்கியம் தரும். மலச்சிக்கல், மேகவெட்டை, கிரந்தி ஆகியவற்றுக்கும் நல்லது.

✦ பனஞ்சாற்றை தேமலுக்கு தடவலாம்.

✦ உட்சூடுதணிக்கும். வேனிற்காலத்தில் சாப்பிட கபம், குன்மம்,தொண்டைநோய் குண மாகும்.மலபந்தம்,சோகையை போக்கும்.

✦ பனங்கற்கண்டு ஆனது பனம் சாற்றி லிருந்து தயாரிக்கப்படும்.இது உடல்சூடு, வெட்டைச்சூடுஎன்பன போக்கும்.

### நுங்கு

பனைநுங்கு,உடற் அழற்சி, சீதபேதிஎன்பன போக்கும். நுங்கு நீர் தடவ வேர்குரு நீங் கும்.

**பனம்பழம்100g இல் உள்ள சத்துக்கள்.**

| | |
|---|---|
| புரதம் | 2.8g |
| கொழுப்பு | 1g |
| கல்சியம் | 86mg |
| பொஸ்பரஸ் | 90mg |
| இரும்பு | 2.2mg |
| விற்றமின் | 28.5mg |
| நார் | 0.5g |
| ஈரலிப்பு | 79.1g |

### எலுமிச்சம் பழம்

✦ இதில் செம்புச் சத்து அதிகமாக காணப் படும் முக்கியமானது.

✦ ஒரு பழச்சாற்றை ஒரு டம்ளர் தண்ணீ ரில் சீனி சேர்த்து கரைத்து சாப்பிடுவதால் பல் வியாதி சுகமாகும்.

✦ அரிய சஞ்சீவி போல் தொழிற்படும்.

குறைந்த செலவில் வியாதிகளை குணப் படுத்தும் அரிய மருந்தாகும். எலுமிச்சம் பழத்தை பிழிந்து1/2 தேக்கரண்டி சோற்று ப்பை போட்டு கலக்கி விடியற்காலையில் சாப்பிட வேண்டும். முன்று நாள் சாப்பிடின் மலச்சிக்கல் தீரும்.

✦ உடலுக்கு தேய்த்துக்குளிக்க அரிப்பு சொறி சிரங்கு கரப்பான் படை நீங்கும்.

✦ எலுமிச்சம் பழத்தை வதக்கி ரசத்தை அருந்த வயிற்றுவலி தீரும்.

✦ எலுமிச்சம்பழச்சாறு, தயிர், தென்னம் பூச்சாறு ஒவ்வொன்றையும் சமமாக காலை, மாலை குழந்தைகளுக்கு தர நீர்ச்சுருக்கு குணமாகும்.

✦ இதனை பொட்டில் இலேசாக தடவ தலைவலி குறையும்.

**100g இல் உள்ள சத்துக்கள்.**

| | |
|---|---|
| புரதம் | 1g |
| கொழுப்பு | 0.9g |
| கல்சியம் | 70mg |
| பொஸ்பரஸ் | 10mg |
| இரும்பு | 2.3mg |
| தயமின் | 20mcg |
| நியாசின் | 0.1 mg |
| விற்றமின் c | 39 mg |
| நார் | 1.7 g |


### நாரத்தை

✦ இதன் பழச்சாற்றை அருந்த தாகம் தணியும் உடலுக்கு குளிர்ச்சி கிடைக்கும்.

✦ நாரத்தை பழச்சாற்றை 250 ml க்கு 150g சீனி சேர்த்து அடுப்பேற்றி பாகுபதம் வரும் வரை காய்ச்சி பெறப்படுவது நாரத்தை பழப்பாகு எனப்படும்.

✦ இப்பழச்சாற்றை உண்டு வர உணவு எளிதில் ஜீரணமாகும்.

✦ நல்ல தூக்கம் வருவதற்கு நாரத்தை




சாற்றில் 1/2டம்ளர் எடுத்து 2தேக்கரண்டி தேன் விட்டு கலக்கி தூங்குவதற்கு ஒரு மணி நேரம் இருக்கும் போது சாப்பிட்டு விடவேண் டும். தூக்கம் இலகுவில் வரும்.

**100g இல் உள்ள சத்துக்கள்**

| | |
|---|---|
| புரதம் | 1g |
| கொழுப்பு | 0.1g |
| காபோவைதரேற் | 10g |
| கல்சியம் | 30mg |
| பொஸ்பரஸ் | 30mg |
| இரும்பு | 0.2mg |
| தயமின் | 120 mcg |
| றைபோபிளேவின் | 20. mcg |
| நியாசின் | 0.3mg |
| ஈரலிப்பு | 88.5 g |

4

### கொய்யாப்பழம்

✦ இப்பழத்தை சாப்பிட மலம் இளகும். விந்து விருத்தியடையும். இரத்தஓட்டம் சீர்பட உதவும்.பற்களுக்கு உறுதி தரும்.உடலுக்கு குளிச்சி ஏற்படும்.உடல் உறுதி பெறும்.

✦ இதனை அதிகம் உண்டால் பசிமந்தம் உண்டாகலாம். வாந்தியும் சிலசமயம் உண்டா கும்.சுவையுணர்வை மட்டுப்படுத்தும்.

✦ இதில் உயிர்சத்து சி அதிகளவில் உண்டு.

✦ வளரும் சிறார்களின் உடல் வளர்ச் சிக்கு உதவும்.

மலச்சிக்கலால் கஷ்டப்படுபவர்கள் நன் றாக பழுத்த இரண்டு கொய்யாப்பழத்தை சாப்பிட்டால் மலமிறங்கும்.

✦ இது பசியை மட்டுப்படுத்தும். எனவே ஆகாரத்துக்கு முன் சாப்பிடக் கூடாது.

**கொய்யாப்பழம்100g இல் உள்ள சத்துக்கள்.**

| | |
|---|---|
| புரதம் | 1g |
| கொழுப்பு | 0.9g |
| கல்சியம் | 70mg |
| காபோவைதரேற் | 11.1g |
| பொஸ்பரஸ் | 10mg |
| இரும்பு | 2.3mg |
| தயமின் | 20mg |
| றைபோபிளேவின் | 10 mcg |
| நியாசின் | 0.1 mg |
| விற்றமின் c | 39 mg |
| நார் | 1.7 mg |
| ஈரலிப்பு | 85g |

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

(தொடரும்)

# கலை, விளையாட்டு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம், பாலர் பாடசாலை இணைந்து நடாத்தும் 59 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இல்ல மெய்வல்லுநர் போட்டியும், பரிசளிப்பு விழா வும், கலை நிகழ்வுகளும் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகி இன்று புதன்கிழமை வரை நடை பெறவுள்ளது.

இன்றைய நாள் நிகழ்வில் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரா ளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, சிறப்பு விருந்தினர்களாக கோண்டாவில் இராம கிருஷ்ண மகா வித்தியாலய அதிபர் ச.வாமதேவன், யாழ்.பல்கலைக்கழக உத விப் பதிவாளர் எஸ்.கே.என்.தவராஜா, மன்/ சின்ன வலையன் கட்டு அ.த.க. பாடசாலை ஆசிரியர் சி.கர்ணன், கோண்டாவில் அசெம் பிளி ஒவ்கோட், அற்புத மத்தியஸ்தான தலைமை போதகர் கலாநிதி.வி.பி. கனகலிங் கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவு ள்ளனர். அத்துடன் இன்று காலை 6 மணி க்கு மரதன் ஓட்டமும் இடம்பெறும்.

(2)

# கப்பம் கோரல் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

(கொழும்பு)

பேலியாகொடை மீன் சந்தையில் கப்பம் பெற்ற சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நகர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது.

கப்பம் கோரல் சம்பவத்துடன் தொடர் புடையவர்கலென சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள அனைவரும் நேற்று முன் தினம் கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப் பட்டி ருந்தனர்.

அதன் போது அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். ஆயினும் அரசியல் அழுத்தங்கள் காரணமாக எந்தவொரு சந் தேக நபரையும் அடையாளம் காட்ட யாரும் முன்வராத நிலையில் அவர்களை பிணை யில் விடுவிக்குமாறு கோரப்பட்ட போதும் நீதவான் அந்தக் கோரிக்கையை நிராகரி த்தே சந்தேக நபர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட் டுள்ளார்.

(ஸ்ரீ-2)





நாம் பயிரிடுவோம் நாளை அறுவடை செய்வோம் என்ற மஹிந்த சிந்தனை திட்டத்திற்கமைய வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கு முகமாக யா/ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையில் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு பயன்தரு மரங்கள், பழமரக்கன்றுகள், மரக்கறிப் பயிர்கள், விதைகள் என்பன அண்மையில் அதிபரால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பெற்றோர் ஒருவருக்கு பாடசாலை அதிபர் பயன் தருமரம் ஒன்றை கையளிப்பதையும் வழங்கப்பட்ட பயன்தரு மரங்களுடன் பெற்றோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# 'கர' வருடம் உங்களுக்கு எப்படி?




(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

**வெற்றிச் செய்திகள் வீடு வரும்!**

**வி.ஐ.பி.க்களின் உறவும் வரும்!**

விரைவில் வி.ஐ.பி.களாக மாற வேண்டும் என்று நினைக்கும் விருச்சிக இராசி நேயர்களே!

புத்தாண்டு கர வருடம் உங்களுக்கு பொருளாதார நிலையை உயர்த்தும் விதத்தில் பிறந்துள்ளது. உலா வரும் கிரக நிலைகளில் இலாப ஸ்தானத்தில் சனி வீற்றிருக்க அதை குரு பார்ப்பதால் வருடத் தொடக்கமே வசந்தமாக இருக்கும்.

வருட தொடக்க நாளில் ஒன்பதுக்கு அதிபதி சந்திரன் பத்தில் உலா வருவதால் தொட்ட காரியங்கள் எல்லாம் வெற்றியாகும். தொகை வந்து கொண்டே இருக்கும். தொழில் வளர்ச்சிக்கு உற்றார், உறவினர்களும் மற்றவர்களும் மாற்றினத்தவர்களும் போட்டி போட்டுக் கொண்டு உதவ முன்வருவர்.

இரண்டில் இராகுவும் எட்டில் கேதுவும் இருப்பதால் வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்வதற்காகவே வருமானத்தை செலவிடுவீர்கள். வீடு கட்டும் முயற்சியிலும் வியக்கும் விதத்தில் தொழில் பங்குதாரர்களைச் சேர்த்து புதிய முதலீடுகளைச் செய்வதிலும் ஆர்வம் காட்டுவீர்கள். குரு மங்கல யோகம் இருப்பதால் கல்யாண கனவுகளும் நனவாகும்.

தொழில் ஸ்தானத்தை சுக்கிரன் பார்ப்பதால் கலைத்துறை, பத்திரிகைத் துறை, ஜோதிடத்துறை, ஆன்மீகம் மற்றும் மருத்துவ துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கர வருடம் கை நிறைய பொருள் கொடுக்கும் வருடமாக அமையப் போகிறது. செவ்வாய்க்குரிய தலங்களுக்குச் சென்று வழிபாடுகள் செய்வதன் மூலமும் இராகு-கேது பெயர்ச்சி காலத்தில் சர்ப்ப சாந்தி செய்வதன் மூலமும் வளர்ச்சியை மேலும் கூட்டிக் கொள்ளலாம். இந்த கர வருடத்தில் மார்கழி மாதம் ஏழரைச்சனி தொடங்கப் போகிறது. உங்கள் இராசிப்படி சகாய ஸ்தானம், சுகஸ்தானம் ஆகியவற்றுக்கு அதிபதியாக சனி விளங்குவதால் அந்த ஏழரை ஆண்டுகளும் சுகங்களும் சந்தோசங்களும் உங்களுக்கு தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்.

எந்த நாள் ஆன போதும் அதை இனிய நாளாக மாற்றுகிற ஆற்றல் சனி பகவானுக்கு உண்டு. அந்த சனீஸ்வர பகவானை தொடர்ந்து வழிபாடு செய்யுங்கள். சந்தோஷத்தை நாளும் சந்திக்கலாம்.

அதுமட்டுமல்ல, சனியின் ஆதிக்கம் நடைபெறும் பொழுது விநாயகப் பெருமானையும் அனுமானையும் விடாது வழிபட்டு வருவது நல்லது. அந்த அடிப்படையில் வடக்கு நோக்கி வீற்றிருந்து அருள் வழங்கும் கற்பக விநாயகரை வழிபட்டு வாருங்கள். அதோடு, விஷ்ணுவையும் லட்சுமியையும் வழிபட்டு வந்தால் உங்கள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். நல்ல திருப்பங்களும் உருவாகும்.

**வெற்றியைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுபவர்கள்!**

செவ்வாயின் ஆதிக்கத்தில் பிறந்த நீங்கள் தீர விசாரித்தே எதிலும் முடிவெடுப்பீர்கள். திடீர் திடீரென திட்டங்களை மாற்றுவீர்கள். வெற்றி ஒன்றுதான் உங்கள் குறிக்கோள் என்பதை வேகத்தில் காட்டுவீர்கள். யாரிடம் எதைச் சொன்னால் காரியம் நடைபெறும் என்ற இரகசியம் உங்களுக்குத் தெரியும்.

செவ்வாயின் பலத்தைப் பொறுத்தும் சுக்கிரன் மற்றும் புதனின் பலத்தைப் பொறுத்தும் நீங்கள் செயற்பட்டால், உங்கள் சிந்தனைகள் அனைத்தும் வெற்றி பெறும். வாழ்க்கைத் துணை அமைவது முதல் வருங்காலத்தை நலமாக்கிக் கொள்ள கூட்டாளிகளைச் சேர்த்துக் கொள்வது வரை சுக்கிரன் மற்றும் புதன் கிரகத்தின் அடிப்படையில்தான் இருக்கிறது.

**வியக்கும் வாழ்வு தரும் வியாழனின் பெயர்ச்சி!**

கர வருடத் தொடக்கத்திலேயே 08.05.2011 அன்று குருபெயர்ச்சி நடைபெறப் போகிறது. உங்கள் இராசிக்கு 2-5க்கு அதிபதியான குரு பகவான் ஆறாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அங்கிருந்தபடியே அதன் பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிவாகிறது. பார்வைப்பலம் உங்களுக்குப் பக்கபலமாக இருக்கும்.

எனவே, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். நாடு மாற்றச் சிந்தனைகளும் நல்ல காரியங்களும் நடைபெற எடுத்த முயற்சி வெற்றி பெறவும் குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது.

*"தேவகுரு ஆறில் வந்தால்,*
*தேவைகள் பூர்த்தியாகும்!*
*ஆவல்கள் தீரவேண்டின்*
*அனுசரிப்பும் தேவையாகும்!*
*கோபத்தை விலக்கினால்தான்*
*குடும்பத்தில் அமைதி கூடும்!*
*தீபத்தில் குருவைக் கண்டு*
*தரிசித்தால் நன்மை சேரும்!"*

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, ஜீவ ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு, தொழில் மற்றும் உத்தியோகத்தில் எதிர்பார்த்தபடி உயர்வைக் கொடுப்பார். இடமாற்றம், ஊர் மாற்றங்கள் இனிமை தரும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். பொதுவாக ஆற்றல் பளிச்சிடும் இந்த நேரத்தில் பயணங்கள் அதிகரிக்கும். புதிய கூட்டாளிகள் வந்திணைவர். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்துசேரும். திசைமாறிய தென்முகக் கடவுள் வழிபாடு செல்வ நிலையை உயர்த்தும்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!**

இதுவரை உங்கள் இராசிக்கு இரண்டாமிடத்தில் சஞ்சரித்து வந்த ராகு ஜென்ம இர்ராசியிலும் எட்டாமிடத்தில் சஞ்சரித்து வந்த கேது இனி ஏழாமிடத்திலும் சஞ்சரிக்கப் போகிறார்கள். அந்த நிகழ்வு மே 16ஆம் திகதி நடைபெறப் போகிறது.

ஜென்மத்தில் சஞ்சரிக்கும் ராகு, விருச்சிக இராசி என்பதால் அள்ளிக் கொடுக்கும் நற்பலன்கள் அதிகமாகவே இருக்கும். குறிப்பாக இடம், பூமியால் ஆதாயம், எடுத்த செயல்களில் வெற்றி, வழக்குகளில் நல்ல திசைதிருப்பம் அனைத்தும் ஏற்படும். பூர்வீகச் சொத்துகளால் வரும் இலாபத்தைக் கொண்டு பொன்னான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது சகல பாக்கியங்களையும் உங்களுக்கு வழங்கவும் மன நிம்மதியைக் கொடுக்கவும் திசைமாறிய விநாயகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது. பயணங்களால் பலன் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் மங்கலச் செய்திகள் வந்துசேரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். புண்ணிய காரியங்களுக்கும் அள்ளிக் கொடுத்துப் போற்றும்படியான வாழ்க்கையை அமைத்துக்கொள்வீர்கள்.

**சந்தோசம் தரும் சனிப்பெயர்ச்சி!**

இதுவரை இலாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் இலாபத்தை அள்ளி வழங்கியிருப்பார். வங்கிச் சேமிப்பும் உயர்ந்திருக்கும். வாங்கிய பொருளும் குவிந்திருக்கும்.

21.12.2011 அன்று ஏழரைச் சனியாக உலாவரப் போகிறார். வரும் சனியையும் வரவேற்றுக் கொண்டாடி, தரும் சுகங்கள் அனைத்தையும் தாராளமாகத் தரச் சொல்லி, பெயர்ச்சியாவதற்கு முன்னதாகவே வழிபாடு செய்யுங்கள்.

சனி பகவான் கோயிலுக்குச் சென்று எள் தீபமேற்றி, நீலவண்ண ஆடை அணிவித்து, எள்ளோதரை நைவேத்தியமிட்டு வழிபாடு செய்தால், வல்லவர்களின் ஒத்துழைப்போடு வருங்காலத்தை நலமாக்கிக் கொள்ள வாய்ப்புகள் வீடு தேடி வரும். இந்த சனிப் பெயர்ச்சியால் சுபச்செலவுகள் அதிகரிக்கும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலங்கள்!**

ஆண்டின் தொடக்கத்தில் சனி வக்ரம் பெறுகிறார். அதன் பின்னரும் தை மற்றும் பங்குனி மாதங்களிலும் வக்ரம் பெறுகிறார். சனி வக்ர இயக்கத்தில் இருக்கும்பொழுது, சஞ்சலங்களும் சந்தேகங்களும் ஆட்கொள்ளும். தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் விடாது செயற்படுத்துவது நல்லது. இடமாற்றங்கள், இலாகா மாற்றங்கள் ஒரு சிலருக்கு ஏற்படும். கட்டடப் பணியிலும் கல்விப் பணியிலும் பொருளைச் செலவிட்டு சுப விரயமாக்குவது நல்லது.

## சிவல்புரி சிங்காரம்

31.08.2011 முதல் 15.12.2011 வரை குரு வக்ரம் பெறும்பொழுது, கூட்டாளிகளிடம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். வாகன மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். பிள்ளைகளிடம் அன்புகாட்டி, அரவணைத்து அவர்கள் மனமறிந்தும் குணமறிந்தும் செயற்பட்டால், பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும். திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபட்டு வந்தால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**பலன் தரும் பரிகாரம்!**

செவ்வாய்க்கிழமை தோறும் முருகப் பெருமானை வழிபட்டு வாருங்கள்.

*(தொடரும்)*





யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் முன்னாள் யாழ். மாநகரசபை மேயர் அமரர் எஸ்.எஸ்.நவரட்ணம் ஞாபகார்த்தமாக கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த ஓய்வு நிலை பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மாதவகுமாரன் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்

3



## ஈழத்துப் பிராமிச் சாசனங்கள்

இலங்கையில் இரண்டாயிரத்துக்கும் மேலான பிராமிச் சாசனங்கள் உண்டு. அவை பிராகிருத மொழிச் சாசனங்கள்; பிராமி வரி வடிவங்களில் எழுதப்பட்டவை. அச்சாசனங்களிற் கையாளப்படும் பிராகிருதம் ஒரு கலப்புமொழி. இந்தியாவிலுள்ள பிராகிருத மொழிக் கல்வெட்டுக்களிற் காணப்படாத பல சொற்கள் அவற்றில் இடம்பெற்றுள்ளன. அவற்றிலே பல தமிழ்மொழிச் சொற்களாகவும் சில திராவிட மொழிகள் சிலவற்றுக்குப் பொதுவான சொற்களாகவும் காணப்படுகின்றன. ஈழத்தின் பல பகுதிகளிலே தமிழ்மொழி வழங்கியமைக்குப் பிராமிச் சாசனங்கள் உறுதியான சான்றுகளாகும். அவற்றிலே காணப்படும் பருமக(ன்) பருமகள், மருமகன, மருமாள, மருக, மாற, ஐ, வேள, ப(ா)ளி முதலியன தமிழ்ச் சொற்களாகும். தமிழ்ச் சொற்களைப் பிராகிருத மொழியில் எழுதுமிடத்து அம்மொழி இலக்கண மரபுகளுக்கேற்ப அவற்றை அமைத்துள்ளனர். பிராகிருதத்திலே சொற்கள் மெய்யெழுத்தில் முடிவதில்லை. அவை பொதுவாக உயிரேறி வரும். எனவே மருமகன், மருமான், பருமகள் என்னும் சொற்கள் முறையே மருமகன, மருமான, பருமகள என்று எழுதப்படும். இவ்வாறு தலைவனை யும் இறைவனையும் குறிக்கும் அய் (ஐ) என்ற சொல்லை அய என்று எழுதியுள்ளனர். அய என்பது ஐயன்(அய்யன்) என்பதற்குச் சமமானது. அபி$_3$ என்பது அதன் பெண்பால் வடிவம்.அரசர், சிற்றரசர் என்போரின் குலங்களைச் சேர்ந்த பெண்களை மட்டுமே அபி$_3$ என்று இச்சாசனங்களிற் குறிப்பிட்டுள்ளனர்.

(No - 5)



பருமக உதி புதஹ பருமக ஸிமஹ லெணெ ஸகு ஸ

(No - 6)




பருமக மித ஐ[ா]ய[ா] பறுமக ஸதநஸ்ஸ ஜித பருமகள புஸாய லெணெ அகத - அநகத சது ஸகு ஸ

அய, அபி$_3$ என்பன தொடர்புடையன என்பதும் அவை முறையே உயர்நிலையிலுள்ள ஆண்களையும் பெண்களையும் குறிக்கும் சிறப்புப் பெயர்கள் என்பதும் இச்சாசனங்கள் மூலம் தெளிவாகின்றது. அபி$_3$ என்பது ஔவை (முதியவள், பெரியவள்,தலைவி) என்ற தமிழ்ச் சொல்லின் கன்னட, தெலுங்கு வடிவமாகும். தமிழ்மொழி இலக்கிய வடிவம் பெறுவதற்கு முற்பட்ட காலத்திலே திராவிட மொழியினை பேசுவோர் இலங்கையில் வாழ்ந்தனர் என்று கருதுவதற்கு ஆதாரமான பல சொற்களும் உண்டு அபி$_3$ அவற்றில் ஒன்று.



தே வநபிய மஹாராஜஹ காமிணி திஸஹ புத மஹதிஸ அயஹ லெணெ ஸகி கெ

கல,கந்த, கிரி, வொலு (வொல) என்னும் சொற்களை எழுதி நிலையாகக் கொண்ட இப்பெயர்கள் திராவிட மொழிகளில் ஏராளமானவை. இவற்றை ஒத்தசிங்கள மொழிப் பெயர்கள் நூற்றுக்கணக்கானவை. இவற்றை எவரும் ஆராய முற்பட்டவராயில்லை. வரலாற்று மொழியியலும் உயர் கலாபீடங்களில் பயிலுவதற்கு வேப்பெண்ணெய் போலாகி விட்டது. இந்த அலட்சியப் போக்கினை பாராட்டிற்குரிய பெருமையாக நோக்கும் மனப்பான்மையும், அறிவின்மை காரணமாகச் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ளது.



தமரஜ புத மஹாதிஸ அயஹ ஜித அபி ஸவேர அய அபய புத திஸ அயஹ ஜாபா அபி ஸவேர லெணே ஸகு ஸ தி நெ

பெருங்கற்படை காலப் பண்பாட்டுக்கும் திராவிட மொழிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு என்பதை முன்பு அவதானித்தோம். இலங்கையிற் பெருங்கற்படைக் காலப் பண்பாடு பல கட்டங்களிலே பரவியதென்று கொள்வதற்கான காரணங்கள் உண்டு.ஆரம்ப கட்டத்தில் அதனை இலங்கையிற் புகுத்தியவர்கள் தமிழ், கன்னட, தெலுங்கு மொழிகளின் திரிபு ஏற்படாத காலத்திற்குரியவர்கள் என்று கொள்ளலாம். அவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் பரவியிருந்தனர். தமிழ்/ திராவிட மொழிமூலமான சொற்கள் அடங்கிய சாசனங்கள் குறிப்பாக வடமேற்கிலும், வடமத்தியிலும், தென்கிழக்கிலும் அமைந்துள்ளன. பெருங்கற்படைக் காலச் சின்னங்களும் அவ்விதமாகவே பரந்து காணப்படுகின்றன.



கஹபதி பரத உதா மருமகனக ஸஸிரேகஹ ஸிரி லெணெ நாம ஸகு ஸ

இலங்கைப் பிராமிச் சாசனங்களிலே தமிழ்- திராவிட மொழிச் சொற்கள் கலந்திருப்பதோடு அவற்றிலே தமிழ்ப் பிராமி வரிவடிவங்களும் காணப்படுகின்றன. தமிழ் மொழிக்குச் சிறப்பாகவுரிய ற, ன, ழ, ள ஆகிய எழுத்துக்கள் அவற்றில் உள்ளன. உதாரணமாக இராஜ என்பதில் ரா காரத்திற்குப் பதிலாக றாகாரமும் வேள என்பதில் ள கரமும் தமேழ என்பதில் ழகரமும் எழுதப்பட்டுள்ளமையினை குறிப்பிடலாம். சாத்தன், திஸன், உதிரன் போன்ற பெயர்கள் அன் விகுதி பெற்ற சொற்களாய் அமைந்துள்ளன. தமிழ் பிராமியில் உள்ளவாறு ஈழத்துச் சாசனங்கள் பலவற்றில் ஈ,ம என்னும் எழுத்துக்கள் அமைந்துள்ளன.



பரதஸக ரிகஸ்ஸ லிணே



பருமக திப ரணேஸ மிஸதல

ஈழத்துப் பிராமி சாசனங்களில் காணப்படும் தமிழ் - திராவிட மொழிச் சொற்களும் தமிழ் பிராமி வடிவங்கள் அவற்றில் ஏற்படுத்தியுள்ள செல்வாக்கும் அச்சாசனங்கள் எழுதப்பட்ட காலத்தில் இலங்கையிலே தமிழ் மொழி வழங்கியமைக்கும் சமூக பண்பாட்டுப் துறைகளிலே தமிழகத்தின் செல்வாக்கு கணிசமான அளவில் ஏற்பட்டிருந்தமைக்கும் சான்றுகள் ஆகும். பிற தொல்பொருள் சின்னங்கள் பற்றிய ஆய்வுகளின் மூலம் இக்கருத்து மேலும் வலுப்பெறுகின்றது.



பதகுமாரய தாதஸ லெணெ ஸகு ஸ திநே


தமிழகத்திற் போல இலங்கையிலும் எழுத்துப் பொறித்த மட்கலங்களும் மோதிரங்களும் நாணயங்களும் குறிப்பிடத்தக்க அளவிற் கிடைத்துள்ளன. தமிழ்ப் பிராமி எழுத்துக்களும் அமைந்திருப்பது அவற்றின் சிறப்பம்சமாகும். அண்மைக் காலங்களிற் கந்தரோடையிலும் வேறு பல இடங்களிலும் எழுத்துப் பதித்த கலவோடுகள் மேலாய்வுகளிலும் அகழ்வாய்வுகளிலும் கிடைத்துள்ளன. அவை தமிழகத்திலே அரிகமேடு, அழகன்குளம், உறையூர், கொடுமணல் போன்ற இடங்களிற் கிடைத்தனவற்றைப் போன்றவை. ஈழத்துக் கலவோடுகளைக் குறித்து ஆராய்ந்த புஷ்பரட்ணம் மேல்வருமாறு எழுதுகிறார்.

"இம்மட்பாண்ட சாசனங்கள் பெரும்பாலும் பெருங்கற்கால ஊரிருக்கை ஈமச்சின்னப் பகுதிகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டவையாகும். அவை கல்வெட்டுக்களைப் போல விரிவான தகவல்களைத் தராவிட்டாலும் அக்கால எழுத்து, மொழி, பண்பாடு என்பவற்றை அறிந்து கொள்ள ஓரளவிற்கு உதவுகின்றன. வட இலங்கையில் எண்ணிக்கையிற் கூடுதலான எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகள் பூநகரி வட்டாரத்தில் உள்ள மண்ணித்தலை, வெட்டுக்காடு, பரமன்கிராய், ஈழஊர், வீரபாண்டியன் முனை ஆகிய இடங்களிற் கிடைத்துள்ளன. இவற்றுள் மண்ணித்தலையில் மட்டும் 16க்கும் மேற்பட்ட எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகள் கிடைத்துள்ளன.கந்தரோடையில் கிடைத்த ஒரேயொரு மட்பாண்ட சாசனத்தைத் தவிர ஏனையவை எழுத்து, எழுத்து வடிவம், மொழி என்பவற்றால் தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களையும் தமிழகத்திற் கிடைத்த மட்பாண்ட சாசனங்களையும் பெருமளவு ஒத்திருக்கின்றன."

வட இலங்கையிற் கிடைத்த எழுத்துப் பொறித்த கலவோடுகளை அவதானிக்குமிடத்து அவற்றைப் பற்றிய இரு பிரதான அம்சங்கள் தெளிவாகின்றன. அவற்றிலொன்று மட்கலங்கள் சுடப்பட்ட பின்பு அவற்றிலே நுண்கருவிகளால் எழுத்துக்கள் கீறல்களாகப் பொறிக்கப்பட்டமையாகும்.

தென்னிந்திய மட்கலங்களிலும் எழுத்துக்கள் இவ்வாறே பொறிக்கப்பட்டமை குறிப்பிடற்குரியது. மற்றைய அம்சம் பானைகளிலும் தகழிகளிலும் அவற்றின் கழுத்திலும் வயிற்றுப் பகுதியிலும் சொற்கள் எழுதப்பட்டுள்ளமை. சில சமயங்களிற் கலங்களின் வாய்ப்புறத்திலும் சொற்கள் எழுதப்பட்டுள்ளன. இதுவும் தமிழகத்தில் நிலவிய வழமையினைப் பின்பற்றிய ஒரு முறையாகும்.


இலங்கையின் வட பகுதியிலும் வேறிடங்களிலும் தமிழ்மொழி வழங்கியமைக்கும் அங்கு அம்மொழியினைப் பேசியவர்களின் குடியிருப்புக்கள் அமைந்திருந்தமைக்கும் கலவோடுகளிற் காணப்படும் சொற்களும் எழுத்துக்களும் சான்றுகளாகும். "இங்கு கிடைத்த மட்பாண்டங்களில் தமிழ்மொழிக்கேயுரிய ள,ழ,ற,ன போன்ற எழுத்துக்கள் காணப்படுகின்றன. அத்துடன் தமிழ்ப் பிராமிக்கேயுரிய ஈ, ம போன்ற சிறப்பெழுத்துக்கள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை தமிழகத்தில் கிடைத்த மட்பாண்ட சாசனங்களையும், குகைக் கல்வெட்டுக்களையும் பெருமளவு ஒத்துள்ளன."



வேளான்



சாத்தன்



கொ[ற்]ற பூமான்
[பெரெணிகே]

கலவோடுகளிற் காணப்படும் சொற்கள் பெரும்பான்மையும் பிராகிருதமாகவன்றித் தமிழ்ச் சொற்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. "இரண்டு மூன்று எழுத்துக்களுடன் கூடிய ஒரு சில சாசனத்தின் வாசகம் (ன்) என முடிகிறது. இது ஆட்பெயராக வருவதனால் ஆண்மகனைக் குறிக்க (அன்) என்ற விகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது. பூநகரிப் பிரதேசத்துப் பரமன்கிராய் என்னுமிடத்திற் கிடைத்த கலவோடொன்றிலே காணப்படும் மூன்று எழுத்துக்களையும் வேளான் என்று அறிஞர் சிலர் அடையாளங்கண்டுள்ளமை குறிப்பிடற்குரியது.

பேராசிரியர் சி.பத்மநாதன்,
B.A, Ph.D, LFIBA

(தொடரும்)

# எல்லை நிர்ணயக் குழுவில் சிறுபான்மையின் பிரதிநிதிகளும் சேர்க்கப்பட வேண்டும்

## பவ்ரல் அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நியமிக்கப்படவுள்ள எல்லை நிர்ணய குழுவில் தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளும் சேர்க்கப்பட வேண்டும் என பிரதான தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான பவ்ரல் சிபாரிசு செய்துள்ளது.

குழுநிலைக்கு சென்றுள்ள இந்தச் சட்ட மூலத்தில் சேர்க்கப்பட வேண்டியவை என அது அபிப்பிராயப்படும் பிரேரணைகளை பவ்ரல் அமைப்பு அரசாங்கத்திற்கும் எதிர்க் கட்சிகளுக்கும் அனுப்பியுள்ளது.

இந்த சட்ட மூலம் விகிதாசார பிரதிநிதித்துவ முறையும் கூடிய வாக்கெடுத்தவர் வென்றவர் என்ற பழைய முறையும் சேர்ந்த ஒரு தேர்தல் முறையை கொண்டுவர முனைகிறது.

பெருந்தோட்ட சமூகத்தினர் கணிசமான தொகையினர் உள்ள மாவட்டங்களுக்கான எல்லை நிர்ணய சபைகளின் இச் சமூகத்தினரின் நலன்களைக் கவனிக்கும் வகையில் அங்கத்தவர்கள் அமைய வேண்டுஎன இந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தேசிய மற்றும் மாவட்ட எல்லை நிர்ணயப் குழுக்களுக்கு அங்கத்தவர்களை நியமிக்கும் போது அல்லது அவர்கள் பதவி விலகும் போது கடைப்பிடிக்க வேண்டிய நியமங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் எனவும் பவ்ரல் தெரிவித்துள்ளது.

புதிய முறையில் கீழ் நடைபெறும் தேர்தல் பிரசாரத்தில் வேட்பாளர் ஒருவர் செலவு செய்யக் கூடிய நிதியின் அளவுக்கு எல்லை விதிக்கப்பட வேண்டும் என பவ்ரல் குறிப்பிட்டுள்ளது.

அங்கத்தவர் தெரிவுக்கான வட்டார முறையினால் தேர்தல் வன்முறையையும் வேட்பாளர் ஒருவருக்கான தேர்தல் பிரசார செலவையும் குறைக்கக் கூடியதாக இருக்கும் என அவ் அமைப்பு கூறியுள்ளது. (ஸ்ரீ-2)

# காந்தீயம் இதழ் வெளிவந்துள்ளது

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அதிகார பூர்வ ஏடான ***காந்தீயம்*** இதழின் ஏப்ரல் -மே 2011 இதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழின் இலவச பிரதியொன்றை தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 5 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர், காந்தீயம், இல 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ள முடியுமென்று காந்தீயம் பத்திரிகை ஆசிரியரும் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினருமான எம். ஷாந்தன் சத்தியகீவர்த்தி தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை இவ்வாரம் பகிரங்கப்படுத்தப்படும்

## பர்ஹான் ஹக் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக் கிளையில் கடமையாற்றி வரும் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக எதிர்வரும் மே மாதம் பாரிய போராட்டம் ஒன்றை நடத்துமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் அமைப்பு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் பணியாளர்களை பாதுகாக்க வேண்டியது இலங்கை அரசாங்கத் தின் கடமையாகும் என அந்த அமைப்பின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் அறிக்கை ஆராயப்பட்டு வருவதாகவும் இந்த வாரத்தில் குறித்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் பதிலுக்காக காத்திருக்கப் போவதில்லை எனவும் அறிக்கை ஆராயப்பட்டதன் பின்னர் முழு அறிக்கையும் பகிரங்கப்படுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் உரிய நேரத்தில் பதிலை அளிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் இவ்வாறு பதில் கிடைக்கப் பெற்றால் அந்தப் பதில் அறிக்கையும் ஒரே நேரத்தில் வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சம்பந்தப்பட்ட நாட்டுடன் அறிக்கையை பகிர்ந்து கொள்வது வழமையான நடைமுறை என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நிபுணர் குழு அறிக்கையிலிருந்து இலங்கையை பாதுகாக்க சீனாவும் ரஷ்யாவும் உதவ வேண்டும்

## ஜே.என்.பி.கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கையிலிருந்து இலங்கையை பாதுகாப்பதற்கு ரஷ்யாவும் சீனாவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜே.என்.பி.கட்சி வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஏகபோக உரிமையை கைப்பற்ற முயற்சி மேற்கொள்வதாகவும் இதற்கு சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் இடமளிக்கக் கூடாது எனவும் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நார்டுகள் அமைப்பு உலக சமாதானத்தை ஏற்படுத்தத் தவறியுள்ளதாகவும் ரஷ்யாவும் சீனாவும் இணைந்து உலக சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமெனவும் ஜே. என்.பியின் சிரேஷ்ட உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் அமெரிக்காவின் கைப்பொம்மையாக செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் ஆஜர்படுத்தும் முயற்சியாக இந்த நிபுணர் குழு அறிக்கை நோக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முயற்சிக்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது எனவும் தங்களது பிணங்களைத் தாண்டியே இவ்வாறு யுத்த வீரர்களை சர்வதேச நீதிமன்றில் ஆஜர்படுத்தும் முனைப்பு மேற்கொள்ளப்பட முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட நிபுணர் குழு அறிக்கையை அவர் ஐக்கிய நாடுகளின் அறிக்கையைப் போன்று சமர்ப்பிக்க முனைவதாக தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகளின்பாதுகாப்புப்பேரவையின் ஒப்புதலின்றி ஒரு நாட்டின் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத் தப்பட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## புலிகள் ஊடுருவல் அச்சம்;

# கேரள கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் ஊடுருவக் கூடும் என்ற அச்சம் காரணமாக கேரள கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்திய மத்தியப் புலனாய்வுப் பிரிவினர் விடுத்த எச்சரிக்கையை அடுத்து இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னையிலிருந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இலங்கையைச் சேர்ந்த 25 பேர் கேரள மற்றும் தமிழக கரையோரங்களின் ஊடாக ஊடுருவுவதற்கு முயற்சிப்பதாக கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சட்டவிரோத குடியேறிகள் முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களா?. என்பது உறுதி செய்யப்படவில்லை. இந்தியாவிற்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசிக்க முற்பட்ட இலங்கையர்களினால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடும் என்ற காரணத்தினால் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கரையோரப் பகுதிகளில் அடிக்கடி ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு கண்காணிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. கரையோரப் பகுதிகளை அண்டிய நகரங்களில் காணப்படும் விடுதிகள் மற்றும் ஹோட்டல்களில் தங்கியிருப்பவர்கள் பற்றிய தகவல்களும் திரட்டப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)





*யுனிசெப் நிறுவனத்தினால் "பிள்ளை நேயப் பாடசாலைகளிற்கான" கண்காணிப்பு மதிப்பிடல் செயலமர்வு நேற்று யாழ். கல்வி வலய ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யுனிசெப் நிறுவன கண்காணிப்பிற்கும் மதிப்பிடலுக்குமான அலுவலர் திருமதி மனோஜா விக்ரமரத்ன செயலமர்வை நடாத்துவதையும் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் யுனிசெவ் நிறுவன உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)*

# சாரத்தியம் - "சவால்களும் சாமர்த்திய திறன்களும்"

# DRIVING- "Challenges and The Essential Skills"

சாரத்தியம் "சவால்களும் சாமர்த்திய திறன்களும்" எனும் இந்நூலானது பெறுமதிமிக்கதும் காலத்துக்கேற்ற அவசியமானதுமான ஒரு பிரசுரமாகும். இந்நூல், வர்த்தக ஸ்தாபனங்களையும் வேறு நிறுவனங்களையும் சேர்ந்த சாரதிகளுக்கும், தமது சொந்த வாகனங்களைத் தாமே செலுத்துவோருக்கும் அத்துடன் வாகன மேற்பார்வையாளர்கள், போக்குவரத்து முகாமையாளர்கள், சாரதி பயிற்றுநர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களுக்கும் விசேடமாக நன்மை பயக்கும் நூலாகும்.

சாரத்திய (வாகனஞ் செலுத்தல்) துறையில் சிறந்த அறிவுடையோரையும் பாதுகாப்புடன் வாகனம் செலுத்துவோராயும் வர விரும்புவோருக்குத் தேவையான அடிப்படைத் தகவல்களை அதிகமாகக் கொண்டுள்ளது. சாரத்தியத்துக்கும் அப்பால் மிக முக்கியமாக தேவைப்படுவதான அனுபவம், முன்னெச்சரிக்கை, நற்பண்பு, பொறுப்புணர்வு ஆகியவை பற்றி நல்ல பூரண விளக்கத்தையும் கொண்டுள்ளது.

மேலும் இது, வாகனப் போக்குவரத்தும் விபத்துத் தடுப்பும், பாதுகாப்பாக வாகனஞ் செலுத்துவதற்கான நுட்பத் திறன்களும் உபாய முறைகளும், வாகனஞ் செலுத்தலின்போது ஏற்படும் பல்வேறு அவசரகட்ட நிலைமைகளை வெல்லுவதற்கான ஆலோசனைகள் ஆகியவற்றை (கீழ் குறிப்பிட்டவாறு) உள்ளடக்கி வெளிவரும் தனிச்சிறப்புமிக்க நூலாகும்.

♦ சீரற்ற கால நிலைகளில் வாகனஞ் செலுத்துதல்.

♦ பாதுகாப்பு முன்னெச்சரிக்கை- நெருக்கமாக பின்தொடருதல், வாகனத் திருட்டுக்கள், இயக்கச் செயலிழப்பு (Breakdowns) தொடர்பானது.

♦ வாகன உபகரணங்கள், பொருத்திகள், கண்ணாடிகள் (காற்றெதிர் கண்ணாடி, மற்றும் பின்நோக்கு கண்ணாடிகள்) (Windscreens and Rear Mirrors, etc) ஆகியவற்றின் பாவனை.

♦ அவசர கட்ட நடவடிக்கைகள்- டயர் வெடித்தல், தடுப்புகள் இயங்காமை (Brake Failure), தீப் பற்றல், பிடிப்புத் தளர்வுடைய சில்லுகள், சுக்கான் சரிவர இயங்காமை (Steering Failure) போன்ற சந்தர்ப்பங்களில்.

♦ விபத்துக்கள், தற்காப்புணர்வுடன் வாகனஞ் செலுத்துதல், விபத்துக்களுடன் தொடர்புடைய காரணிகள் மற்றும் சூழ்நிலைகளில் விபத்தைத் தவிர்த்தல்.

♦ பாதுகாப்பாக வாகனஞ் செலுத்தற்கான ஆலோசனைக் குறிப்புகள்.

♦ மதுவும் அதன் விளைவுகளும் மற்றும் சட்டம்.

♦ எரிபொருள் நுகர்வுக்கான வழிகாட்டி.

♦ அவசரகால முதலுதவி.

♦ வீதிப் போக்குவரத்து விபத்து தொடர்பான நட்டச்செலவு, அரசாங்கத்துக்கு உண்டாகும் பொருளாதார நட்டம் மற்றும் விபத்தில் பலியாகும் அல்லது பாதிப்புறும் தனிநபர்கள்.

♦ வீதி சைகைகளும்/சமிக்ஞைகளும் அடையாளங்களும்.

பாதுகாப்பாக வாகனஞ் செலுத்தி அதன்மூலம் விபத்துத் தடுப்புக்கு பங்களிப்பு செய்வதன் விளைவாக பணமும் மிச்சமாகிறது அல்லது பண நஷ்டம் தவிர்க்கப்படுகிறது எனலாம். இங்கு, இந்த அடிப்படைத் தகவல்களும் பாதுகாப்புக்கான ஆலோசனைகளும் தரப்பட்டிருப்பதானது சிறந்த சாரத்தியத்தை/ வாகனஞ் செலுத்தலை ஊக்குவிப்பதற்கும் விபத்துக்களை தடுப்பதற்குமாகவே!

சொந்தமாக வாகனம் வைத்திருப்போருக்கும், நிறுவனங்களில் சாரதிகளாக இருப்போர்களுக்கும், போக்குவரத்து முகாமையாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் இந்நூலானது பின்வரும் நன்மைகளை அளிக்கிறது.

♦ சாரதியின் செயற்றிறமை அதிகரித்தல்,

♦ வாகனத்தின் செயற்பாட்டு திறன் விருத்தி (சிறந்த செயற்பாடு).

♦ விபத்துக்கள் மற்றும் பழுது பார்த்தல் செலவு, பராமரிப்பு செலவு ஆகியன மிகக் குறைதல்.

♦ எரிபொருள் சிக்கன மேம்பாடு.

♦ கம்பனி/ நிறுவனத்தின் இலாபம் மற்றும் நிதி ஸ்திரத்தன்மை பாதுகாக்கப்படல்.

♦ உடற்காயங்களும் ஆதன சேதங்களும் பெருமளவில் குறைதல்.

இதன் மூலம் விளங்க வேண்டியது என்னவென்றால்-அதிகளவு பணமீதத்தாலும் உயர் உற்பத்தித்திறனாலும் ஒரு நிறுவனமானது தனது இலாபத்தின் அளவை பெருக்கிக் கொள்கிறது என்பதாம்!

இந்நூலானது "வருமுன் தவிர்த்தலானது வந்தபின் செய்யும் பரிகாரத்தைவிட மேலானது" என்ற எண்ணக் கோட்பாட்டுக்கு அமைய உருவாக்கம் பெற்றுள்ளது.




1. சாரதியின் பாதுகாப்பு

2. வாகனத்தின் பாதுகாப்பு

இலங்கையிலே தற்போது பாரம்பரியமாக காணப்படும் வழக்கம் அல்லது விடயம் யாதெனில்-

1. கம்பனிகளும் நிறுவனங்களும் வீதிப் பாதுகாப்புப் பிரச்சினைகளை தமது சாரதிகள் வசமே விட்டுவிடுதல்.

2. விபத்துக்கள் மற்றும் போக்குவரத்து விதிகளை மீறுதல் போன்றவற்றை தடுக்கவோ, குறைக்கவோ இதுவரை ஆக்கபூர்வமாக எதுவும் செய்யப்படாமை.

225இற்கும் மேற்பட்ட வர்ணத்திலான விளக்கப் படங்கள் மற்றும் வர்ணத்திலான 200 வீதி சைகைகளும் அடையாளங்களும் வாசிப்பதற்கு இலகுவான முறையில் விவரண ஆவணம் போன்று தொகுக்கப்பட்ட ஒரு நூலாக-புதிய அதிவேக நெடுஞ்சாலைக்கு உரிய வீதி சைகைகளுடன் சேர்த்து -இதனை ஆக்கியிருக்கிறார் இந்நூலாசிரியர்.

இந்நூலானது, மும்மொழிகளிலும் (தமிழ், சிங்கள, ஆங்கிலம்) உருவாகியுள்ளது. கையாளப்பட்டுள்ள எளிய மொழிநடையும், மிகப் பொருத்தமான விளக்கப்படங்களும் இந்நூலின் மதிப்பை உயர்த்துகின்றன. இதனது விளக்கப்படங்களும் இந்நூலின் மதிப்பை உயர்த்துகின்றன. இதனது விளக்கப்படங்கள் கவர்ச்சிகரமாயும் கிரகிக்கக்கூடியதாயும் உள்ளன.

இந்நூலை வாசிப்பவர் ஏற்றுக்கொள்ளும் உண்மை என்னவெனில்-

வீதிப் பாதுகாப்பு, விபத்துத் தடுப்பும் போக்குவரத்து முகாமையும் போன்ற துறைகளில் இந்நூலாசிரியர் பெற்றுள்ள நீண்டகால அனுபவம் மற்றும் அவரின் பரந்த ஆழமான அறிவின் வெளிப்பாடே **சாரத்தியம்** "சவால்களும் சாமர்த்திய திறன்களும்" என்ற இந்நூலாகும் என்பதாம்! இவர் இந்நூலின் ஆக்கத்துக்காக கடுமையான ஆராய்ச்சி, ஆயத்தங்கள், சீரிய சிந்தனை ஆகியவற்றை விதைத்துள்ளார்.

இந்நூலின் வெளியீட்டு நிகழ்ச்சியை இலங்கையின் மாகாண நகரங்களில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது-அதாவது கொழும்பு, கண்டி, காலி, இரத்தினபுரி, குருநாகல், பதுளை, அநுராதபுரம் மற்றும் வடக்கு-கிழக்கு (யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை) உள்ளடங்கலாக.

வீதியில் ஏற்படும் விபத்துக்கள், மரணங்கள் ஆகியவற்றை தவிர்க்கும்-தடுக்கும் நல்நோக்கத்துக்காக வினைத்திறன்மிகு வீதிப்பாதுகாப்பு மற்றும் விபத்துத்தடுப்பை முன்னிட்டு இந்நாட்டிலுள்ள ஒவ்வாரு வாகன சாரதியையும் மூன்று மொழிகளிலான இந்த நூலின் வாயிலாக தொடர்பு கொள்வதும் நாடுவதும் இந்நூலாசிரியரின் பணித்திட்டமாகும்.

தற்போது, பாதுகாப்பாக வாகனம் செலுத்துதல் தொடர்பாக இலங்கையில் வீதிப் பாவனையாளர்கள் பயன்படுத்துவதன் பொருட்டு முறையான நூல்கள் எதுவும் கிடையாது. ஆகவே, நீண்ட காலமாக இருந்துவரும் இந்தக் குறையை இந்நூல் பூர்த்தி செய்கிறது எனலாம். வாசித்து விளங்கக்கூடிய இலகு நடையில் அமையத் தக்கதாக இந்த அறிவுறுத்தல் கைந்நூல் உருவாகும் பொருட்டு இதன் உள்ளடக்க விடயங்கள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இவ் வண்ணம் இது, தற்போதைய அத்துடன் எதிர்கால வீதிப்பாவனையாளர்களுக்கு மிக்க நன்மைபயப்பதாகவுள்ளது.

இந்நூலில் அடங்கியுள்ள தகவல்களை கவனமாக வாசித்தும், அதன்படி கவனித்தும் செயற்படுவீர்களாயின், அத்துடன் உங்கள் சாரத்தியத்திலே நல்ல நம்பிக்கையும் மனோவியல்புகளையும் பேணிவருவீர்களாயின், நீங்கள் பாதுகாப்பாக நல்ல ஆயுளுடன் வாழலாம். இதனை நன்கு கற்றும் இதன்படி ஒழுகியும் நடந்தால், பல வருட காலத்துக்கு பாதுகாப்பான சாரத்தியத்தை நிச்சயம் அனுபவிக்கலாம்.

**நினைவில் வைக்கவும்**
**உங்கள் பாதுகாப்பு உங்கள் கரங்களிலேயே!**

**விபத்து நிலைமை**

♦ அதிகரித்த வண்ணமே இருக்கும் சனத்தொகை மற்றும் போக்குவரத்தின் அளவு காரணமாக வீதி விபத்துக்கள் தொடர்பான பிரச்சினைகள் மேலும் மேலும் சிக்கல் மிகுந்ததாகிறது. இலங்கை போன்ற அபிவிருத்தியடையும் நாடு ஒன்றுக்கு விபத்துக்களானது, சமூக, சுகாதார, பொருளாதார அடிப்படையில் மோசமான பிரச்சினையாக காணப்படுகிறது.

♦ தமது அன்றாட வேலைகள் நிமித்தம் வீதிகளைப் பயன்படுத்தும் இலங்கையின் வீதிப் பாவனையாளர்கள் இலங்கையின் நெடுஞ்சாலைகளிலே ஆபத்தான பகுதிகளில் உள்ளிடும்போது தமது பாதுகாப்பு தொடர்பில் நிச்சயமற்ற நிலையிலே உள்ளனர். கடந்த காலங்களில் தொடர்ந்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் கூட இந்த வகையான பாதுகாப்பற்ற நிலைமைகள் விடயத்தில் கவனயீனமாகவே இருந்து வந்துள்ளன.

♦ வருடாந்த விபத்துக்களின் எண்ணிக்கையானதும், வருடாந்தம் 2 ஆயிரம் மரணங்கள் உட்பட 50 ஆயிரத்துக்கும் அதிகமானவை என்பதை அறிந்திருப்பீர்கள். விபத்துக்களின் எண்ணிக்கை தினசரி 150-160 ஆகவும் மரணங்களின் எண்ணிக்கை தினசரி 5-6 ஆகவும் உள்ளது. விபத்துக்கள் தொடர்பான நட்டச்செலவு 13 பில்லியன் ரூபா ( Rs. 13Billions) ஆகவும், இது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 1% ஆகும். 65 % ஆன வீதிவிபத்துக்கள் வீதிப் பாவனையாளர்களின் அசட்டை, தவறான அனுமானங்கள் மற்றும் வாகன சாரதிகளின் அக்கறையின்மை, கவனயீனம் ஆகியவற்றாலேயே சம்பவிக்கின்றன.

♦ கடந்த சில வருடங்களாக, வீதி நெறி முறைகளிலும் வீதி நடத்தைகளிலும் முழுவதுமான ஒழுக்கப்பிறழ்வு ஏற்பட்டுள்ளது.

♦ இந்த நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டினரும் எமது உள்நாட்டினரும் இலங்கையில் வாகனம் செலுத்துதலை ஒரு திகிலாக உணர்கின்றனர். இத்தகையை போக்கு அச்சமூட்டுவதானது.

♦ விபத்து தொடர்பான புள்ளி விபரங்கள் காயப்பட்டோர்களை பின்வருமாறு வகைப் படுத்திக்காட்டுகிறது:-

பாதசாரிகள் 28.44%, பிரயாணிகள் 15%, மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் 24.44%, மோட்டார் சைக்கிளின் பின் சவாரி செய்பவர்கள்-8%, சாரதிகள் 10.2%, சைக்கிள் ஓட்டுநர்கள் 8.93% ஏனையோர் 5.13%.

நகர்ப் புறங்களிலே காயப்பட்டோர் மற்றும் மரணித்தோர்களாக மிக அதிகமாக காட்டப்படுவோர் அன்றாடம் பொருளாதாரத்துக்காக உழைப்போர் ஆவர்.

♦ 20-65 வயதுக்கு இடைப்பட்ட காயப்பட்ட பாதசாரிகள் வகையினர் 65% ஆகும். ஆகவே, இலங்கையில் பாதசாரிகள் தொடர்பான விபத்தை தடுக்க வேண்டியதான தேவை மிக அவசியமானதாகும். மேலும் நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு கூட, சம்பந்தப்பட்ட அதிகார நிறுவனங்களுக்கு இவ்விடயம் முக்கியமானதும் அவசியமானதுமாகும்.

♦ இலங்கையிலே விபத்தைத் தடுப்பதற்கும் வீதிப் பாதுகாப்பை உறுதி செய்வதற்குமான பாரிய பொறுப்பை மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளடங்கலாக தேசிய அரசும் மாகாண சபைகளும் பொறுப்புடன் ஏற்க வேண்டும்.

♦ வாகனப் போக்குவரத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபராகவும் (D.I.G.-Traffic) வீதிப் பாதுப்புக்கான தேசியப் பேரவையின் முன்னாள் தவிசாளராகவும் இருந்த - இலங்கை விபத்துத் தடுப்புச் சங்கத்தின் தற்போதைய தலைவராக இருக்கும் இந்நூலாசிரியர் இலங்கையிலே அதி கரித்துக் கொண்டுபோகும் விபத்துக்களுக்கான நிலைமைகளைக் குறைக்கும் வகையில் ஒரு உயர்தரத்திலான ஆக்கத்தை (நூலை) தந்துதவ வேண்டும் எனும் நோக்கில் இலங்கை வீதிகள் தொடர்பில் தான் பெற்ற நீண்ட அனுபவத்தையும் அறிவையும் ஒன்று சேர்த்து இந்நூலை ஆக்கியிருக்கிறார்.

♦ இந்நூலாசிரியர் "தேசிய விருது 2003"ஐ பெற்றவராவார், வீதிப்பாதுகாப்பை மேம்படுத்துதல், விபத்துத் தடுப்பு மற்றும் இலங்கையில் ஆட்களின் பயணப் பாதுகாப்பு ஆகியவையெல்லாம் தொடர்பாக இவர் ஆற்றிய உயர் பங்களிப்புகளுக்காக "அதி சிறப்பு விருது, "பாராட்டு விருதுகள்" ஆகியன வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

♦ இந்நூலை உருவாக்குவதற்கு இவர் உயர்ந்த தகுதியை உடையவராவார். இந்நூலை, பொருத்தமான காலகட்டத்தில் பயன்மிக்கமுறையில் எழுதி உருவாக்கித் தந் தமைக்காக இவர் மிகவும் போற்றுதற்குரியவர்.

♦ இந்நூலில் அடங்கியுள்ள தகவல்களை மிக்க கவனமாக வாசித்து விளங்கி, அத்தகவல்கள் மற்றும் அறிவுரைகளுக்கமைய ஒழுகி நடப்பீர்களானால் சந்தேகமின்றி பல வருட காலத்துக்கு பாதுகாப்பான சாரத்தியத்தை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கலாம்.


**வீதி விதிகள் உங்கள் பாதுகாப்புக்காகவே!**



**த.பேரின்பநாயகம்**

ஓய்வுபெற்ற பிரிதிப் பொலிஸ்மா அதிபர்-போக்குவரத்து (D.I.G-Traffic)
முன்னாள் தலைவர்-வீதி பாதுகாப்புக்கான தேசிய பேரவை, இலங்கை.
தலைவர்- இலங்கை விபத்துத் தடுப்புச் சங்கம்

# ஆனந்த அலை



## ஆன்மீகம் 30

### ஆனந்த சாகரம்

உலகை ஆனந்த சாகரமாக செய்திடலாமா? செய்ய முடியுமா இல்லையா? படைத்தவனே நமக்குள் இருக்கும்போது செய்யமுடியுமா இல்லையா? படைத்தவனே நமக்குள் இருக்கும்போது செய்யமுடியுமா இல்லையா? செய்ய முடியும் என்று உறுதி இருக்கிறதா மனதில்? இது இன்னொருத்தருக்காக இல்லை. நீங்கள் ஆனந்த சாகரத்தில் வாழவேண்டும் என்று நினைக்கிறீர்களா? துன்ப சாகரத்தில் வாழவேண்டுமென்று நினைக்கிறீர்களா? ஆனந்த சாகரம் தானே? அப்படி என்றால் உருவாக்கிக் கொள்ளவேண்டும்தானே? எல்லோருக்கும் அதே விருப்பம் இருக்கிறது.

ஆனால் அவர்கள் இப்போது நான் சொன்ன கதை பீர்பால் சமையல் போட்டதுபோல் அவர் வேறு எங்கோ இருக்கிற வெப்பம் எடுக்கலாம் என்று பார்க்கிறார்கள். இங்கேயே(உங்களுக்குள்ளேயே) பொங்குகிறது. இதைப் பார்க்கவில்லை. அங்கே இருந்து வெப்பம் எடுத்து சமைத்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறார்கள். அந்த மாதிரி சமையல் நடக்காது. சும்மா பார்த்துக் கொள்ளலாம்.

### எதைப் பற்றித்தான் கவலைப் படாமல் இருக்கிறீர்கள்?

உங்கள் ஆனந்தம் ஏதோ திருமணத்தில் இருக்கிறது, ஆகாயத்தில் இருக்கிறது. சொத்தில் இருக்கிறது என்று பார்த்துப் பார்த்து முயற்சி எடுத்து ஒன்றும் நடக்கவில்லை. உள்நிலையில் ஆனந்தம் நடந்தால் தான் அது உங்கள் உணர்வுக்கு வரும். நான் இப்போது இங்கே மிகவும் ஆனந்தத்தை உருவாக்குகின்றேன். ஆனால் உங்களால் அதைத் தெரிந்து கொள்ளமுடியாது. ஏனெனில் உங்களுக்குள்ளே நடந்தால் தானே உங்களுக்குத் தெரியும்? இந்த மூச்சுக்காற்று இங்கே இருக்கிறது. இதனால் நமக்கு உயிரே நடந்திருக்கிறது. ஆனால் உள்ளே போனால் தானே உங்களுக்குத் தெரிகிறது? இல்லை என்றால் உங்களுக்கு ஒன்றும் தெரியாது.

அதனால் ஆனந்தத்தின் மூலம் எங்கேயோ இருக்கிறது என்று பார்த்தீர்கள் என்றால்,சொர்க்கத்தில் இருக்கிறது என்று நினைத்தால் இங்கேயே நரகம் உங்களுக்கு ஏற்பட்டுவிடும். வேறு ஒன்றும் நடக்காது.

ஏதோ வாழ்க்கை நீங்கள் நினைத்தது போல் நடந்தால் கொஞ்சம் சந்தோசப்படுவீர்கள். ஆனந்தத்தின் மூலம் நமக்குள் இருந்தால் பயமில்லாமல் வாழ்க்கையை நடத்திக் கொள்ளலாம். உயிரே போனாலும் கூட பயமில்லை. ஏனென்றால் ஆனந்தத்தின் மூலம் நமக்குள் இருக்கும் போது செத்தாலும் ஆனந்தமாகத்தானே சாகிறோம் என்ற தைரியம் வரும். அப்போது முழுமையாக வாழ்வீர்கள் தானே?

உயிரோடு இருந்தாலும் ஆனந்தமாகத்தான் இருப்பேன், உயிர்போனாலும் ஆனந்தமாகத்தான் இருப்பேன் என்றதொரு நம்பிக்கை வந்து விட்டதென்றால், நமக்கு வாழ்க்கை பற்றியும், பிறப்புப்பற்றியும், இறப்புப்பற்றியும் என்ன கவலை? ஆனால் இப்போது எல்லாமே கவலைதான். வாழ்க்கையில் எது பற்றியாவது கவலை இல்லாமல் இருக்கிறீர்களா? எல்லாமே கவலைதானே? படிப்பு என்றால் கவலைதானே? சரி படிக்காமல் ஆனந்தமாக இருங்கள் என்றால் இருப்பீர்களா? இல்லை அதுவும் கவலைதான். ஏதோ ஒரு தொழில் செய்யவேண்டுமென்றால் கவலைதானே? வேண்டாம். சும்மா உட்காருங்கள். கோயில் முன்னாடி உட்காருங்கள். யாரோ நாலுகாசு போடுவார்கள். ஆனந்தமாக உட்காருங்கள் என்றால் உட்காருவீர்களா? அதுவும் கவலைதான். எது கவலையில்லை சொல்லுங்கள்? எல்லாமே கவலைதான்.

### பயப்படும் மனது எதையும் நம்பும்

எதனால் என்றால், நன்மை என்பது எங்கேயோ இருக்கிறது என்று நாம் நினைத்து விட்டோம். நமது நன்மை எங்கோ வெளியே இருந்தால் எப்போதுமே நமக்குக் கவலைதான். ஏனென்றால் வெளியில் இருக்கும் பொருள் எப்போதும் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்காது. சில நேரம் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. சில நேரம் இருக்காது. நம் நன்மை என்பது நமக்குள்ளேயே உணர்ந்தால் நாம் கவலை இல்லாமல் இந்த வாழ்க்கை நடத்திக் கொள்ள வாய்ப்பு இருக்கும்.

குடிலில் வாழ்ந்தாலும் அரண் மனையில் வாழ்ந்தாலும் நமக்குள்ளே ஆனந்தம் இருந்தால் தானே நாம் ஆனந்தமாக இருக்க முடியும். இல்லை என்றால் அரண்மனையும் நரகம்தான், குடிலும் நரகம்தான். அப்படித்தானே? இப்போது ஆன்மீகம் இன்னொரு மாதிரி மதமென்று நினைத்துக் கொள்ள வேண்டாம். எல்லாமதமும் ஏதோ ஒரு காலத்தில் ஆன்மீக மாகத்தான் ஆரம்பித்தது. ஆனால் வர வர அது வேறு மாதிரி ஆகிவிட்டது.

எப்போது மனிதனுக்குப் பய உணர்ச்சி வந்து விட்டதோ உங்களை நான் எது வேண்டுமானாலும் நம்ப வைக்க முடியும். எது வேண்டுமானாலும், இது, அது என்று இல்லை எது வேண்டுமானாலும்.

இந்தப் பூச்சியை மூன்று தடவை சுற்றி வந்தால் உங்கள் வாழ்க்கை மிகவும் நன்றாக இருக்கும் என்றால் அந்தப் பூச்சியைச் சுற்றுவதற்குக் கூட ஒரு முயற்சி நடந்துவிடும். இதை நான் உங்களைக் கிண்டல் செய்வதற்காகச் சொல்லவில்லை. ஆனால் மன நிலை என்பது இப்படித்தான். பயம் இருக்கும் போது எதை வேண்டுமானாலும் நம்பும்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்த தவறிய தமிழர் சமுதாயம்

01



சங்ககால இலக்கியங்கள் தமிழ் மக்கள் வரலாற்றினை எடுத்தியம்பும் மிக முக்கியத்துவம் வாய்ந்த சான்றாதாரங்களாகக் கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்விலக்கியங்கள் இரண்டாயிரம் ஆண்டுகாலத்திற்கு முற்பட்ட பழைமை உடையவை என இலக்கிய வரலாற்று ஆய்வாளர்களால் கருதப்படுகிறது. சங்க இலக்கியங்களின் உன்னத இலக்கியப்பண்புகளை நோக்கும்பொழுது குறித்த இக்காலப் பகுதியில் திடீரென இவ்விலக்கியங்கள் தோன்றியிருக்க இயலாதென்பதனை தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.இக்காலப் பகுதிக்கு முன்னரே தமிழில் சிறந்த இலக்கியப் படைப்புக்கள் உருவாகி இருந்திருக்க வேண்டும். அந்த இலக்கியங்களின் தொடர்ச்சியாகவே இன்று சங்க இலக்கியங்களென போற்றப்படுகின்ற இலக்கியங்கள் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு முன்னரே ஓர் இலக்கியப் பிரவாகமின்றி சங்க இலக்கியங்கள் போன்று வளமுள்ள இலக்கியங்கள் உருவாவதற்கான சாத்தியங்கள் இல்லையென்றே கூறலாம்.

தமிழர் வரலாற்றில் சங்ககாலம் (கி.பி முதல் 3நூற்றாண்டுகள்), சங்கமருவிய காலம் (கி.பி 4-6 நூற்றாண்டுகள்) ஆகிய ஆறு நூற்றாண்டு காலமும் தமிழ் நாட்டிலிருந்த முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்பனவற்றை அடியாதாரமாகக் கொண்டு சங்க, சங்கமருவிய காலங்கள் என இலக்கிய காலங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதன் பின்னருள்ள இலக்கிய வரலாற்றுக்காலங்களின் பகுப்பு, அக்கால ஆட்சி அதிகாரங்களில் இருந்த அரசுகளின் அடிப்படையில் பிரித்துக் கூறப்பட்டுள்ளன. பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம் என ஏறத்தாழ 13நூற்றாண்டுகள் காலம் அவ்வப்போது தமிழ் நாட்டை ஆண்டு வந்த அரசுகளின் ஆட்சிக் காலங்களுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஐரோப்பியர் காலத்தை தொடர்ந்து வருங்காலப் பகுதி இருபதாம் நூற்றாண்டு என குறிப்பிடப்படுகிறது. சங்கம், சங்கமருவிய காலங்

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

களும் இருபதாம் நூற்றாண்டும் மாத்திரம் அதிகாரத்திலிருந்த அரசுகளின் அடிப்படையில் காலங்கள் வகுத்து கூறப்படாது தவிர்க்கப்பட்டுள்ளன. சங்க காலம் முதல் ஐரோப்பியர் காலம் வரை (பாரதியின் வருகைக்கு முன்னுள்ள காலம் வரை) தமிழில் தோன்றிய இலக்கியங்கள் பற்றிய பொதுவான ஒரு நோக்கினை மேற்கொள்ள வேண்டியது இன்று மிகுந்த முக்கியத்துவமுடைய ஒன்றாக உணரப்படுகின்றது. இத்தகைய நோக்கின் அடிப்படையாகத் தமிழர் சமுதாயம் பற்றிய தெளிவினைப் பெற்றக்கொள்ளுதல் முக்கியமான ஒன்றாக தோன்றுகின்றது.

சங்ககாலம் தொடக்கம் ஐரோப்பியர் காலத்துப்பின் கூறு வரையுள்ள மிக நீண்டகால கட்டத்தில் எழுந்த இலக்கியங்கள் காட்டும் தமிழர் சமுதாயம் பற்றிய உண்மைத்தன்மையினை கேள்விக்குள்ளாக்க வேண்டியிருக்கிறது. அந்த இலக்கியங்கள் வரலாற்று ஆவணங்கள் மாத்திரமல்ல. இலக்கியங்கள் வரலாற்றுக்கு வழங்கும் பங்களிப்பு உண்மையில் காத்திரத் தன்மை கொண்டவை அல்ல. ஆனால் வரலாற்று ஆதாரங்களின் ஒரு பகுதியாக மட்டுமே இலக்கியங்களை கொள்ளலாம். நடைமுறையில் கண்ட சில உண்மைகளின் அடிப்படையில் கற்பனை கலந்து மெருகூட்ட பெற்றவைகளே இலக்கியங்கள். ஒரு சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, வாழ்விடம், தொழில், கலை, கலாசாரம், சமயம், சடங்கு, நம்பிக்கை என பல்வேறு அம்சங்களை இலக்கியங்களுக்கூடாக உணர்ந்து கொள்ளலாம். சங்ககால இலக்கியங்கள் முதல் ஐரோப்பியர் காலம் வரை எழுந்த இலக்கியங்கள் ஏறக்குறைய பத்தொன்பது நூற்றாண்டுகால இலக்கியங்கள். முழுமையான தமிழ் மக்கள் எல்லோரது வாழ்வு நிலையினை வெளிப்படுத்துகின்றனவா? என்பதே இன்று நமக்கு முன்னுள்ள பிரதானமான வினாவாகும். தமிழ் மக்களின் அன்றைய வாழ்வு மிக மேலானதென காலங் காலமாக சொல்லிக் கொண்டு வருவதற்கு பண்டைய தமிழ் இலக்கியங்களே சான்றாக காட்டப்படுகின்றன. ஐரோப்பியர் காலம் வரையுள்ள தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் உண்மையில் தமிழ் மக்கள் அனைவரதும் வரலாற்றினையோ வாழ்வு நிலையினையோ

**தெணியான்**

பண்பாட்டினையோ அல்லது ஏனைய அம்சங்களையோ பற்றிப்பேசுகின்றவையல்ல. குறிப் பிட்ட சிறிய ஒரு குழுவினராக இருக்கும் அதிகாரவர்க்கம் பற்றியே அவைகள் பேசுகின்றன. பெரும்பான்மையினரான தமிழ் மக்களின் வாழ்க்கை பற்றிய தெளிவின்றியே தமிழர் நாகரிகம், பண்பாடு முதலியன பற்றித் தொடர்ச்சியாக சிலாகித்து உயர்வாகப் பேசப்பட்டு வருகிறது. எனவே இது பற்றிய உண்மை பேராசிரியர் கா.சிவத்தம்பியின் பின் வரும் கூற்றின் வழியாக வெளிப்படுத்தப்படுகின்றது எனலாம். (தொடரும்)

## ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்யவேண்டும்

### ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கப்பம் கோரல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்குக்காட்டிய அதேமுனைப்பு ஊடகவியலாளர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்வதற்கும் காட்டப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி அமைதியான முறையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸின் கண்ணெதிரில் தாக்குதல் நடத்திய சில பாதாள உலக கோஷ்டியினர் அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டதாகச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

சியத்த ஊடகம் தாக்கப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ளதாகவும் லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போய் நீண்ட நாட்கள் கடந்துள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர்களான உபாலி தென்னக்கோன் மற்றும் போத்தல ஜயந்த மீது தாக்குதல் நடத்தியவர்கள் இதுவரையில் கைதுசெய்யப்படவில்லை எனவும் இவ்வாறான சம்பவங்களுடன் அரசாங்கத்திற்குத் தொடர்பிருக் கலாம் என மக்கள் சந்தேகிப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கப்பம் கோரல் சம்பவங்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் தொடர்புள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான அரசியல்வாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.(ஸ்ரீ-2)

## தோட்டத் தொழிலாளர்களின் சம்பளவுயர்வு தொடர்பான இரண்டாவது பேச்சுவார்த்தை

(கொழும்பு)

முதலாளிமார் சம்மேளனத்திற்கும் தொழிற்சங்கத்தினருக்குமிடையில் எதிர்வரும் 29 ஆம் திகதி தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது முதலாளிமார் சம்மேளனம் சம்பள உயர்வு தொடர்பான தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் என தொழிற்சங்கத் தலைவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

பேச்சுவார்த்தையில் 21 கம்பனிகளைத் தவிர இரண்டு இலட்சம் சிறு தோட்டக் கம்பனிகளும் இதில் சம்பந்தப்படுவதால் விட்டுக் கொடுப்புடனும் அதேவேளை தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டதாகவும் பேச்சுவார்த்தைகள் அமையுமென தெரிவிக்கப்படுகிறது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான முதலாவது பேச்சுவார்த்தை கடந்த 4 ஆம் திகதி நடைபெற்றது. இதன் இரண்டாவது பேச்சுவார்த்தை எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்படவுள்ள விடயங்கள் சம்பந்தமாக கூடி ஆராய்வதற்கென தொழிற்சங்கங்கள் அடுத்த வாரம் சந்திக்கவுள்ளன.

(ஸ்ரீ-2)

## புகைப்படக் கலை தொடர்பான கருத்துரை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலை வட்டம் மற்றும் நுண்கலைத்துறையின் ஆதரவில் இலங்கையின் பிரதான புகைப்படக் கலைஞர்களுள் ஒருவரான மெனிக்கா வன்டெர் போட்டனின் புகைப்படக் கலை தொடர்பான கருத்துரை நிகழ்வு இன்று மாலை 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புதிய கலைப்பீட கட்டடத்தொகுதியில் நடைபெறவுள்ளது.

எனவே இந்நிகழ்வில் புகைப்படக் கலை ஆர்வலர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்கள் ஆகியோரை கலந்து சிறப்பிக்குமாறு கலைவட்டத்தலைவர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)



யாழ். மாநகரசபையின் அனுசரணையுடன் அண்மையில் நடைபெற்ற புத்தாண்டு விழாவில் யாழ். வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்வை படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

## 2011.04 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1534-இழ்சாக் கார்ட்டியே தனது கடற்பயணத்தை ஆரம்பித்தார். இப்பயணத்தின் போதே அவர் கனடாவைக் கண்டுபிடித்தார்.

★ 1653-ஒலிவர் குறொம்வெல் இங்கிலாந்து நாடாளுமன்றத்தைக் கலைத்தார்.

★ 1657-அமெரிக்காவில் நியூ ஆம்ஸ்டர்டாம் (தற்போதைய நியூ யோர்க் நகரம்) என்ற டச்சுக் குடியேற்றத்தில் யூதர்களுக்கு மதச் சுதந்திரம் அளிக்கப்பட்டது.

★ 1775-அமெரிக்கப் புரட்சி போர்: பொஸ்டன் நகரை கைப்பற்றும் போர் ஆரம்பமானது.

★ 1792-பிரான்ஸ் ஆஸ்திரியா மீது போரை அறிவித்தது. பிரெஞ்சு புரட்சி போர்கள் ஆரம்பித்தன.

★ 1859- சார்ல்ஸ் டிகப்கன்ஸ் எழுதிய இரண்டு நகரங்களின் கதை புதினம் வெியிடப்பட் டது.

★ 1862-லூயி பாஸ்டர் மற்றும் குளோட் பேர்னார்ட் ஆகியோரின் பாஸ்ச்சரைசேஷன் முறையை முதன் முதலாக சோதித்தார்.

★ 1902-பியேர் மற்றும் மேரி கியூரி ரேடியம் குளோரைட்டைத் தூய்மைப்படுத்தினர்.

★ 1914-ஐக்கிய அமெரிக்காவில் கொலராடோவில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தின் போது பொலிஸார் தாக்கியதில் பெண்கள், குழந்தைகள் உட்பட் 45 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1926-திரைப்படத்துக்கு ஒலியை இணைக்கும் வைட்டாபோன் என்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1945-இரண்டாம் உலகப்போர்: ஐக்கிய அமெரிக்க படைகள் ஜேர்மனியின் லெயிப்சிக் நகரைக் கைப்பற்றின. ஆனாலும் அடுத்த நாளே இதனை சோவியத் ஒன்றியத்துக்கு அளித்தன.

★ 1945-இரண்டாம் உலகப்போர்: ஜேர்மனியின் லெய்ப்சிக் நகரத் தந்தை தனது குடும்பத்துடன் தற்கொலை செய்து கொண்டார்.

★ 1945-அடொல்ஃப் ஹிட்லர் கடைசித் தடவையாக தனது சுரங்க பதுங்கு இருப்பிடத்திலிருந்து வெளியே வந்தார்.

★ 1961-கியூபாவில் ஐக்கிய அமெரிக்காவின் பிக்ஸ் விரிகுடாத் தாக்குதல் தோல்வியில் முடிந்தது.

★ 1967- சைப்பிரஸில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 126 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1968-தென்னாபிரிக்கா விமானம் ஒன்றுதென்மேற்கு ஆபிரிக்காவில் விழ்ந்ததில் 122 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1972-அப்போலோ 16 சந்திரனில் இறங்கியது.

★ 1978-தென் கொரியாப் பயணிகள் விமானம் சோவியத் ஒன்றியத்தில் சுடப்பட் டதில் இரு பயணிகள் கொல்லப்பட்டனர். 107 பேர் தப்பினர்.

★ 1998-கொலம்பியாவில் போயிங் விமானம் ஒன்று மலை ஒன்றுடன் மோதியதில் 53 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1998-28 ஆண்டுகள் இயங்கிய ஜேர்மனியின் சிவப்பு இராணுவ அமைப்பு என்ற தீவிரவாத அமைப்பு கலைக்கப்பட்டது.

★ 1999-கொலராடோவில் உயர்தரப்பள்ளி ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் கொல்லப்பட்டனர். துப்பாக்கிதாரி பின்னர் தற்கொலை செய்து கொண்டான்.

★ 2007-டெக்சானில் ஹூஸ்டன் நகரில் உள்ள நாசாவின் விண்வெளி ஆய்வு மையத்தின் பணியாளரில் ஒருவன் பயணக்கைதி ஒருவரை கொன்று தன்னையும் சுட்டுக் கொன்றான்.

### பிறப்புக்கள்

★ 507-முகமது நபி, இஸ்லாம் மத தாபகர் (இ.1632) (உறுதிப்படுத்தப் படவில்லை)

★ 1808-மூன்றாம் நெப்போலியன், பிரெஞ்சு மன்னன்(இ.1873)

★ 1889-அடொஃப் ஹிட்லர், ஆஸ்திரியாவில் பிறந்து ஜேர்மனியை ஆண்ட சர்வாதிகாரி (இ.1945)

★ 1910 - சிட்டி பெ.கோ.சுந்தரராஜன், எழுத்தாளர் (இ.2006)

★ 1918 - காய் சீக்பான், நோபல் பரிசு பெற்றவர்

★ 1927 - கார்ல் முல்லர், நோபல் பரிசு பெற்றவர்

★ 1939 - பிரமீள், ஈழத்து எழுத்தாளர். (இ.1997)

★ 1950-நா. சந்திரபாபு நாயுடு, இந்திய அரசியல்வாதி

### இறப்புக்கள்

★ 1918 - கார்ல் பிரவுன், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர் (பி1850)

★ 2003-பேர்னார்ட் காட்ஸ், மருத்து வத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி1911)

# உலகக் கிண்ண கிரிக்கெட் பரிசுப் போட்டி முடிவுகள்

நடந்து முடிந்த பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை முன்னிட்டு உங்கள் வலம்புரி பரிசுப்போட்டி நடாத்தியது. தினம் ஒரு பரிசு என்ற மாபெரும் பரிசுப்போட்டியில் வெற்றிபெற்றோர் மற்றும் சரியான விடையை எழுதிய வாசகர்களின் விபரங்கள் இங்கு பிரசுரமாகின்றன.

இப் பரிசுப் போட்டிக்கு பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் தமது பங்களிப்பை வழங்கி ஆதரவையளித்தனர். அத்துடன் சரியான விடையை எழுதி ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை சமர்ப்பித்தனர். இவ்வாறு ஆதரவு வழங்கிய வாசகர்களாகிய உங்களுக்கு வலம்புரிக் குடும்பம் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது. அத்துடன் இப்பரிசுப் போட்டிகளை நடாத்துவதற்கு அனுசரணை வழங்கிய ஒலிம்பியா ஸ்போட்ஸ், M.C.S, அல்டி எலக்ரோனிக், நவகலா, Suntel ஆகிய நிறுவனங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## தினம் ஒரு பரிசு – 20

***இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டியில் வெற்றிபெறும் அணி எது?***


**விடை :- இலங்கை**

**பரிசு பெறுபவர்கள் :-**

1) **கு.சந்திரகுமார் (சுருவில் வீதி, ஊர்காவற்றுறை)**
2) **ந.தர்மேந்திரன் (9ம் வட்டாரம், புங்குடுதீவு)**
3) **வி.சிந்துஜன் (பெரிய லேன், கோப்பாய் தெற்கு)**
4) **ரி.பிரதீப் (ஆலடி, வல்வெட்டித் துறை)**
5) **ந.பரமேஸ்வரன் (நுணாவில் சந்தி, சாவகச்சேரி)**

***பாராட்டுப்பெறுபவர்கள்......***

இ.மோகனராஜ் (சங்குவேலி வடக்கு), எஸ்.கலதாசன் (ஆதி கோவிலடி, வி.வி.ரி), ரி.பிரணவன் (ஆலடி, வல்வெட்டித்துறை), எம். பிரான்சிஸ்க் (பருத்தித்துறை வீதி, தும்பளை), எஸ்.நிறோஜன் (மனோகரா, அல்வாய்), இ.பிரியந்தன் (சரசாலை வடக்கு, சாவகச்சேரி), வை.கோகுலன் (கே.கே.எஸ் வீதி, கோண்டாவில்), இ.ஸ்ரீகஜன் (புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம்), சி.சசிந்தன் (கல்லாரை, மல்லாகம்), மா.கமலநாதன் (ஒமக்ஸ் ஹொட்டல், ஆஸ்பத்திரி வீதி), தே.ஜனந்தன் (சரசாலை தெற்கு, சாவகச்சேரி), கி.கபில் (பூவசிட்டி, அச்செழு), ப.உதயகுமார் (மஞ்சத்தடி கோயில், இணுவில்), சி.தெட்சணாமூர்த்தி (குப்பிழான், ஏழாலை), த.சுஜேந்திரா (மணத்தறை ஒழுங்கை, கந்தர்மடம்), வ.திருமாளன் (சாவகச்சேரி), த.நீலலோகன் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), ச.கபிலன் (சிவபுர வீதி, வல்வெட்டித்துறை), என்.கிருத்திகன் (பண்டாரிக்குளம் மேற்கு, நல்லூர்), ம.நிலோஜன் (மாட்டீன் றோட், யாழ்ப்பாணம்), கு.சிந்துஜா (நவாலி வடக்கு, மானிப்பாய்), சி.விதுயன் (கட்டுவன் மேற்கு, தெல்லிப்பளை), செ.கிரிசாந் (ஞான வைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு), கி.சிவர்ா சபவன் (குரும்பை கட்டி, புலோலி வடமேற்கு), எஸ். கே.பலேகுமார் (தங்காலய வீதி, பருத்தித்துறை), இ.ஸ்ரீகஜன் (புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம்), எஸ்.திருமகள் (புளியங்கண்டு வீதி, ஆனைக் கோட்டை), மு.பாக்கியம் (உச்சி யோடை, மானிப்பாய்), றூ.கம்சிகாந் (பாரதி வீதி, நாயன் மார்கட்டு), வி.துஷாந் (வரணி இயற்றாலை, வரணி), ம.மதி யழகன் (தெல்லிப்பளை கிழக்கு), க.ஜனகன் (கிருஷ்னானந்த வாசம், அல்வாய் தெற்கு), க.கலையமுதன் (இராமநாதன் கமம், மருதநகர்), தி. மணிமோகன் (பன்னாலை, தெல்லிப்பளை), சா.ஜினேஸ் (திருநகர் வடக்கு, கிளிநொச்சி), ம.குகன் (நீதிமன்றம் முன்பாக, கிளிநொச்சி), ஆர்.ராம்ஜி (கில்னர் லேன், யாழ்ப்பாணம்), சி.திருவனந்தன் (கூட்டுறாவாளர் வீதி, அளவெட்டி), ரி.காணப்பிரியா (ஆலடி, வல்வெட்டித்துறை), கி.கபில் (பூலசிட்டி, அச்செழு)



## தினம் ஒரு பரிசு – 21

***பத்தாவது உலகக் கிண்ணத் தொடரில் போட்டியொன்றில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர் யார்?***

**விடை :- வீரேந்திர செவாக்.**

**பரிசு பெறுபவர்கள் :-**

1) **ம.பிரான்சிஸ்க் (பருத்தித்துறை வீதி, தும்பளை)**
2) **பி.கோபிகா (மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கு)**
3) **சி.சேரன் (சாலையடி, புலோலி தெற்கு)**
4) **சி.முரளிதரன் (அன்னசத்திர லேன், கந்தர்மடம்)**
5) **இ.விருதன் (சம்பந்தர் கடையடி, கரவெட்டி மத்தி)**

***பாராட்டுப்பெறுபவர்கள்......***

தி.தவலக்சன் (கருவேலடி வீதி, கொக்குவில்), சா.ஜினேஸ் (திருநகர் வடக்கு, கிளிநொச்சி), எஸ். திருமகள் (புளியங்கண்டு வீதி, ஆனைக்கோட்டை), க.கலையமுதன் (இராமநாதன் கமம், மருதநகர்), ப.உதயகுமார் (மஞ்சத்தடி கோவில் வீதி, இணுவில் கிழக்கு), சி.திருவனந்தன் (கூட்டுறாவானர் வீதி, அளவெட்டி), தி.விமலதாஸ் (இராஜ தோப்புவளவு, கண்டி வீதி), சு.ரதிதேவி (வளாக வீதி, கொக்குவில் கிழக்கு), த.நீலலோகன் (பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்), கு.சந்திரகுமார் (சுருவில் வீதி, ஊர்காவற்றுறை), ச.கபிலன் (சிவபுர வீதி, வல்வெட்டித்துறை), பா.சோஜிந்தன் (அளவெட்டி தெற்கு, அளவெட்டி), யோ.காண்டீபன் (சோதிவேம்படி லேன், மானிப்பாய்), செ.மாதுரன் (பிரம்படி வீதி, கொக்குவில்), கி.கபில் (பூலசிட்டி, அச்செழு), சி.பரஞ்சோதி (கற்கோவளம், பருத்தித்துறை), அ.நீ.குலேந்திரன் (ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), இ. ஸ்ரீகஜன் (புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம்), ஆர்.ராம்ஜி (கில்னர் லேன், யாழ்ப்பாணம்), ச.அனிஸ்ரன் (கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை), உ.சுபாஜினி (மஞ்சத்தடி கோவில் வீதி, இணுவில் கிழக்கு), தே.ஜனந்தன் (சரசாலை தெற்கு, சாவகச்சேரி), றூ.கம்சிகாந் (பாரதி வீதி, நாயன்மார்கட்டு)ப.சசிதரன் (5ம் வட்டாரம், நயினாதீவு), சி.சசிந்தன் (கல்லாரை, மல்லாகம்), த.சுஜேந்திரா (மணத்தறை லேன், கந்தர்மடம்), எஸ்.நிறோஜன் (மனோகரா, அல்வாய்), கா.வடிவேல் (இராமநாதன் கமம், மருதநகர்), மு.ஜெயந்தி (பிள்ளையார் கோயிலடி, சித்தண்கேணி)

## தினம் ஒரு பரிசு – 22

***கடந்த 1999இல் எந்த அணியை வீழ்த்தி அவுஸ்திரேலியா உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது?***

**விடை :- பாகிஸ்தான்**

**பரிசு பெறுபவர்கள் :-**

1) **க.நிகிந்தன் (மந்துவில் கிழக்கு, கொடிகாமம்)**
2) **என்.நவரத்தினம் (பண்டாரிக் குளம் மேற்கு லேன், நல்லூர்)**
3) **ரா.ஜனனி (சங்கரவத்தை, கரணவாய் வடக்கு)**
4) **த.நீலலோகன் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்)**
5) **ஜே.காண்டீபன் (சோதிவேம்படி லேன், மானிப்பாய்)**

***பாராட்டுப்பெறுபவர்கள்......***

ப.சசிதரன் (5ம் வட்டாரம், நயினாதீவு), க.கலையமுதன் (இராமநாதன் கமம், மருதநகர்), சி.சசிந்தன் (கல்லாரை, மல்லாகம்), ப.உதயகுமார் (மஞ்சத்தடி கோயில், இணுவில்), தே.ஜனந்தன் (சரசாலை தெற்கு, சாவகச்சேரி), எம்.பிரான்சிஸ்க் (பருத்தித்துறை வீதி, தும்பளை), நெ.அனோஜ் (அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்), செ.மாதுரன் (பிரம்படி வீதி, கொக்குவில்), ரி.பிரனவன் (ஆலடி, வல்வெட்டித்துறை), கு.கயல்விழி (அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி), தி. விமலதாஸ் (இராஜதோப்பு வளவு, கண்டி வீதி), ரி.பிரதீப் (ஆலடி, வல்வெட்டித்துறை), க.பரணீதரன் (கலை அகம், அல்வாய்), ரி.குனப்பிரிஜா (ஆலடி, வி.வி.ரி), எஸ்.கலாதாஸன் (ஆதி கோவிலடி, வி.வி.ரி), சா.ஜீனேஸ் (திருநகர் வடக்கு, கிளிநொச்சி), சிந்துயன் (மல்லாகம்)

***(தினமொரு கேள்வி போட்டிக்கான மிகுதி விபரங்கள் நாளை தொடரும்)***



M.C.S இன் பரிசுக்கான வெற்றி யாளரை அதன் பணிப்பாளர் தெரிவு செய்வதை படத்தில் காணலாம்.

# ஐஸ்வர்யம் பெருக உதவும் பரிகாரம்

ஜாதகம் இல்லாதவர்கள் பிறந்த ஆங்கில வருடம், திகதி தெரியாதவர்களும், இராசி - நட்சத்திரம் தெரியாதவர்களும், தங்களது பிரச்சினைகள் தீர 'விருட்ச பரிகாரம்' செய்யலாம். இதற்கு அவர்கள் பிறந்த தமிழ்



வருடம் மட்டும் தெரிந்தால் போதும். அந்த ஆண்டுக்குரிய மரத்தை 3, 6, 11 என்ற எண்ணிக்கையில் அவரவர் சக்திக்கேற்ப ஆலயங்களில், அல்லது பொது இடத்தில், அல்லது ஆற்றங்கரை ஓரத்தில், அல்லது தர்ம ஸ்தாபனத்திற்கு சொந்தமான இடத்தில் நடலாம்.

அமிர்த, சித்தயோகம் பார்க்க வேண் டிய அவசியம் இல்லை. வாரம் முழுவதும் எப்பொழுது வேண்டுமானாலும் நடலாம். சூரியன் உதயமாகி மறைவதற்கு முன் நட வேண்டும். நெல்,கோதுமை,துவரை, பயறு, கடலை, மொச்சை, எள், கொள்ளு, உளுந்து போன்ற நவதானியங்களை ஊற வைத்து, அந்த நீரினை நட்ட மரக்கன்றுக்கு விடவும். நவதானியத்தை பசுமாட்டிற்குத்தரலாம்.

இவ்விதம் செய்வதால் கடன், விரோதம், செய்வினை, பிரிவு, திருமணத்தடை போன்ற அனைத்தும் விலகும். ஆரோக்கியமும், ஐஸ்வர்யமும் பெருகும்.

| வருடங்களும் | மரங்களும் |
|---|---|
| பிரபவ | கருங்காலி |
| விபவ | அக்ரோட் |
| சுக்ல | அசோக மரம் |
| பிரமோ தூத | அத்தி |
| பிரஜோத்பத்தி | பேயத்தி |
| ஆங்கீரச | அரசு |
| ஸ்ரீ முக | அரைநெல்லி |
| பவ | அல்யாத்தி |
| யுவ | அழிஞ்சில் |
| தாது | ஆச்சாமரம் |
| ஈஸ்வர | ஆலமரம் |
| வெகுதான்ய | இலந்தை |
| பிரமாதி | தாளைபனைமரம் |
| விக்ரம | இலுப்பை |
| விஷு | உருத்திராட்சம் |
| சித்ரபானு | எட்டி |
| ஸ்வபானு | ஒதியம் |
| தாரண | கடுக்காய் |
| பார்த்திவ | கருங்காலி |
| விய | கருவேலம் |
| சர்வஜித் | பரம்பை |
| சர்வதாரி | குல்மோஹர் |
| விரோதி | கூந்தல் பனை |
| விக்ருதி | சரக்கொன்றை |
| சுர | வாகை |
| நந்தன | சண்பகம் |
| விஜய | சந்தனம் |
| ஜய | சிறுநாகப்பூ |
| மன்மத | தூங்கு மூஞ்சி மரம் |
| துர்முகி | நஞ்சுண்டா |
| ஏவிம்பி | நந்தியாவட்டம் |
| விளம்பி | நாகலிங்கம் |
| விகாரி | நாவல் |
| சார்வரி | நுணா |
| பிலவ | நெல்லி |
| சுபகிருது | பலா |
| சோபகிருது | பவளமல்லி |
| குரோதி | புங்கம் |
| விசுவாசக | புத்திரசீவி மரம் |
| பராபவ | புரசு |
| பிலவங்க | புளியமரம் |
| கீலக | புன்னை |
| சவுமிய | பூவரசு |
| சாதாரண | மகிழம் |
| விரோதிகிருத் | மஞ்ச கடம்பை |
| பரீதாபி | மராமரம் |
| பிரமாதீச | மருது |
| ஆனந்த | மலைவேம்பு |
| ராட்சச | மாமரம் |
| நள | முசுக்கொட்டை |
| பிங்கள | முந்திரி |
| காளயுக்தி | கொழுக்கொட்டை |
| | மந்தாரை |
| சித்தார்த்தி | தேவதாரு |
| ரவுத்ரி | பனைமரம் |
| துர்மதி | ராம்சீதா |
| துன்துபி | மஞ்சள் கொன்றை |
| ருத்ரோத்காரி | சிவப்பு மந்தாரை |
| அட்சய | வெண்தேக்கு |

## ஜோதிடக் களம்

## கிளிநொச்சி மாவட்டத்தில் இறுதிக்கட்ட மீள்குடியேற்றம்

(பருத்தித்துறை)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரம் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருவதோடு இவர்களுக்கு வங்கிகள் ஊடாக கடன் வழங்கும் திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இம்மாவட்டத்தில் இறுதிக்கட்ட மீள்குடியேற்றமாக. இன்று புதன்கிழமை 40 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளன.

இந்த இறுதி மீளக்குடியமர்வுடன் இடம் பெயர்ந்த மக்கள் அனைவரும் மீள்குடியமரும் நிலை ஏற்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

(ஸ்ரீ-3-10)

## மின்னல் தாக்கி இருவர் உயிரிழப்பு

கல்கமுவ மற்றும் மீகலாவ ஆகிய பொலிஸ் பிரிவுகளில் மின்னல் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மதவாச்சிப் பகுதியில் மின்னல் தாக்கி 41 வயதான பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக கல்கமுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை மழை பெய்த சந்தர்ப்பத்தில் குறித்த பெண் வயலொன்றில் இருந்த போதே மின்னல் தாக்கத்திற்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மீகலாவத ஹுரிக்கஸ் வெவ பகுதியிலும் ஒருவர் மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளார்.

35 வயதான ஒருவர் மழையின் போது மரமொன்றிற்கு கீழே நின்றுகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்த அனர்த்தத்திற்கு உள்ளானதாக மீகலாவ பொலிஸார் குறிப்பிட்டனர்.

(ஸ்ரீ-2)

## சைவப்புலவர் தேர்வுகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால்,வருடாவருடம் நடாத்தப்படும் சைவப் புலவர் தேர்வுகள் எதிர்வரும் 22,23,24 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் நாவலர் மகாவித்தியாலயம்,கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி,மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை,கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலை ஆகிய நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இத்தேர்வுக்கான நேரஅட்டவணை, அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் இது வரை கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் தலைமையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறும் தலைவர் அறிவித்துள்ளார்.மேலும் தேர்வுக்கு இம் முறை இருநூறு வரையான பரீட்சார்த்திகள் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)


## வந்தாறுமூலை வளாகத்தில் நேற்றுமுதல் விரிவுரைகள்

(கொழும்பு)

வந்தாறுமூலை வளாகத்தின் விரிவுரைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிழக்குப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

காலவரையறையின்றி மூடப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை வளாக அனைத்து மாணவர்களையும் விரிவுரைகளுக்குச் சமூகமளிக்குமாறு அறிவித்திருப்பதாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் கலாநிதி பிரேமகுமார் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)



யா/கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையில் மாணவர்களுக்கு 'சின்னம் சூட்டும் விழா' அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த வலிகாமக் கல்வி வலய கணித பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சுகுமாரன் சிரேஷ்ட மாணவ முதல்வருக்கு சின்னம் சூட்டுவதைப் படத்தில் காணலாம்.

## கிழக்குப் பல்கலைக்கழகப் பிரதேசத்தில் பெருந்திரளான பொலிஸார் குவிப்பு

(கொழும்பு)

கால வரையறையற்று கடந்த மாதம் மூடப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகம் நேற்று செவ்வாய்க்கிழமை மீண்டும் ஆரம்பமானது.

இதனை அடுத்து கிழக்குப் பல்கலைக் கழகப் பிரதேசம் முழுவதும் பெருந்திரளான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

கடந்த மாதம் பொலிஸாருக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இதை அடுத்து மாணவர்கள் அங்குள்ள பொலிஸாரை வெளியேறுமாறு ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதனை அடுத்து கிழக்குப் பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்படுவதாக நிர்வாகம் அறிவித்திருந்தது.

இதேவேளை, மேற்படி பிரச்சினை தொடர்பாக தீர்வு காணப்படாத நிலையில் நேற்று மீண்டும் ஆரம்பமான பல்கலைக்கழக நடவடிக்கையின் போது மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டால் அதனைக்கட்டுப்படுத்த பொலிஸார் பெருந்திரளாகக் குவிக்கப் பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ஸ்ரீ-2)

## முதுமாணி கற்கைநெறிகளுக்கான விசேட மீள் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தால் நடாத்தப்படும் அபிவிரு த்தி முதுக லைமாணி,குடித்தொகை அபிவிருத்தி முதுகலைமாணி, பிராந்தியத் திட்டமிடல் முதுகலைமாணி கற்கைநெறிகளுக்குரிய விசேட மீள் பரீட்சை எதிர்வரும் மே மாதம் இறுதி வாரத்தில் நடைபெறும் என பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித்துள்ளார். ஸ்ரீ

# இலங்கைக்கான உதவித் தொகையை இரட்டிப்பாக்க உலக வங்கி இணக்கம்

இலங்கைக்கான உதவித் தொகையை அடுத்த வருடம் இரட்டிப்பாக்குவதற்கு உலக வங்கி இணைக்கம் தெரிவித்துள்ளதாக சர்வ தேச நிதி ஒத்துழைப்பு சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி ஒக்கொன்ஜோ இவெலாவை வோஷிங்டனில் சந்தித்த போதே இது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு உலக வங்கி தொடர்ச்சியாக வழங்கி வரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர் உலக வங்கியின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

பொருளாதார ரீதியில் நாடு முன்னேறிச் செல்வதற்கான திட்டங்களுக்கு உலக வங்கி தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் எனக் குறிப்பிட்ட ஒக்கொன்ஜோ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதன் மூலம் நாட்டின் தலா வருமானத்தை அதிகரிக்கும் இலங்கை அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டத்துக்கு உலக வங்கி ஒத்துழைப்பு வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

நடுத்தர வருமானங்களைக் கொண்ட நாடுகளின் அபிவிருத்திக்கு உலக வங்கி உதவி வருகிறது எனக் குறிப்பிட்ட அவர் இதே போன்று இலங்கைக்கும் உதவிகளை வழங்கும் என்றும் கூறியுள்ளார்.

இலங்கையின் புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்திக்காக வங்கியிலிருந்து நிதி உதவிகளைப் பெறுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். இலங்கையில் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டிருக்கும் அபிவிருத்திப் பணிகளைப் பாராட்டியுள்ள அவர், அபிவிருத்திகள் மற்றும் திறன்களை இலங்கை ஏனைய தெற்காசிய நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதையே உலக வங்கி எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## புதுவருடத்தில் இ.போ.சபைக்கு 100 மில்லியன் ரூபா வருமானம்

(கொழும்பு)

புது வருடத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சுமார் 100 மில்லியன் ரூபாவுக்கு அதிகமாக வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் எம்.பி.பந்தசேன தெரிவித்தார்.

இம்மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரையில் நாள் ஒன்றுக்கு ஐந்து மில்லியன் ரூபா வீதம் கிடைக்கப் பெற்றதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## அம்பாந்தோட்டையின் கிரிந்தை பிரதேசத்தில் நிலநடுக்கம்

### ஏழு வீடுகள் சேதம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கிரிந்தைப் பிரதேசத்தில் இடம்பெற்ற சிறியளவான நிலநடுக்கம் காரணமாக ஏழு வீடுகள் சேதமுற்றுள்ளன. நேற்று முன்தினம் இரவு ஏழு மணியளவில் கிரிந்தை பிரதேசத்தில் இருக்கும் யால சந்தி எனுமிடத்தில் இடம்பெற்ற சிறியளவான பூகம்பம் காரணமாகவே அப் பகுதியில் அமைந்திருந்த ஏழு வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமும் உறுதி செய்துள்ளதுடன் வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களையும் உறுதிப்படுத்தியுள்ளது.

ஆயினும் கிரிந்தையில் ஏற்பட்டுள்ள பூகம்பம் தொடர்பில் இதுவரை சரியான ஆய்வேதும் மேற்கொள்ளப்படாத நிலையில் உறுதியாக எதனையும் கூறமுடியாதிருப்பதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது. தற்போது பூகற்பவியலாளர்கள் குறித்த பிரதேசத்தில் மேலதிக ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். (ஸ்ரீ-2)

## மாணவர்களின் கல்வி அறிவை வளர்க்க நிபுணத்துவம் பெற்ற இளைஞர்களே தேவை

### அப்துல்கலாம் தெரிவிப்பு

(டுபாய்)

மாணவர்களின் கல்வியறிவை வளர்க்க உயர் கல்வியுடன் கூடிய திறமையான இளைஞர்கள் இந்தியாவுக்கு தேவைப்படுகின்றனர் என்று இந்தியாவின் முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

சிபிஎஸ்சி பாடத்திட்ட ஆசிரியர்களின் சர்வதேச கருத்தரங்கை டுபாயில் கடந்த 17ஆம் திகதி ஆரம்பித்து வைத்துப் பேசிய கலாம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,

இந்த 21ஆம் நூற்றாண்டில் மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் உயர் கல்வியை கற்றுக்கொடுக்கவும் அவர்களின் அறிவுப் பசியைத் தூண்டிவிடவும், அவர்களை திறமையாளவர்களாக உருவாக்கவும் உயர் கல்வியில் நிபுணத்துவம் பெற்ற இளைஞர்கள் நமது நாட்டிற்கு அதிக அள வில் தேவைப்படுகின்றனர்.

இந்தியாவில் இந்த அளவுக்குத் திறமையுள்ள இளைஞர்கள் கிடைப்பதில் பெரும் இடைவெளி உள்ளது. இந்த இடைவெளியைப் போக்க பாடசாலைகளிலும், பாடசாலை பாடத்திட்டத்திலும் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும். இந்த மாற்றத்தை இப்போதே செய்யத் தயாராக வேண்டும்.

பாடசாலைப் பருவம் மிகவும் முக்கியமானது. இங்குதான் மாணவர்களிடத்தில் தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் உருவாக்க முடியும். இதைச் செய்ய என்னால் முடியும். நாம் எல்லோரும் சேர்ந்து உத்வேகத்தை உருவாக்க முடியும் என்றார். (ஸ்ரீ-2)

## 2ஜி அலைக்கற்றை வழக்கில் சி.பி.ஐ.க்கு உதவத் தயார்

### சுப்பிரமணியம் சுவாமி அறிவிப்பு

(புதுடில்லி)

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு வழக்கில் சி.பி.ஐ. அதிகாரிகளுக்கு உதவத் தயாராக இருப்பதாக டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை ஆஜரான ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணி சுவாமி தெரிவித்தார்.

இந்த முறைகேடு வழக்கில் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் அவர் தனியாக வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இந்நிலையில், சி.பி.ஐ. அதிகாரிகளுக்கும் அரச தரப்பு வழக்கறிஞர் லலித்துக்கும் உதவத் தயாராக இருப்பதாக அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

சுவாமியின் கருத்துத் தொடர்பாக பதில் அளிக்க சி.பி.ஐ. தரப்பில் கால அவகாசம் கோரப்பட்டது. இரு தரப்பு வாதத்தையும் கேட்ட நீதிபதி ஓ.பி.சைனி, சி.பி.ஐ.க்கு 2 வாரங்கள் அவகாசம் அளித்து மே 4ஆம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்தார். (ஸ்ரீ)


**PALMYRAH DEVELOPMENT BOARD**

**பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு**

**MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISES DEVELOPMENT**

**Renovation of Palmyrah Research Institute Building for Palmyrah Development Board at Kaithady-Jaffna.**

1. The Chairman of the Palmyrah Development Board now invites sealed bids from eligible and qualified bidders for "Renovation of Palmyrah Research Institute Building for Palmyrah Development Board, Jaffna" as described below and estimated to cost of Rs.13.26 million.

The Construction period is 180 Days.

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade M5/C6 or above with the institute for construction Training and Development (ICTAD).

4. Interested bidders may obtain further information from the Department of Building (Central), Beach Road, Jaffna or The Chairman, Palmyrah Development Board (Jaffna) and inspect the bidding documents at the same address on any working day from 8.30 hrs to 16.15 hrs. Contact numbers are Phone: 021 2222034 Facsimile: 021 2224154 & Building Department No: 021 2222781.

5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna from 27th April 2011 until 10th May 2011 from 8.30 hrs to 16.15 hrs upon payment of non refundable fee of Rupees one thousand (Rs.1,000/-)

6.Bids shall be delivered or sent by registered post to The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna before 10.00 hrs on 20th May 2011. Bids will be opened soon after closing at the Office of The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna in presence of the bidders' representatives who choose the attend.

7. Bidders are advised to enter "NHDA Building, Kandy Road, Jaffna" Premises at least 1 hour before the scheduled time for tender closing, due to security checking.

8. All bids shall be accompanied by a Bid Security obtain for a reputed Bank in Sri Lanka

- In the form included in the Section 09 of the Bidding document
- In favour The Chairman, Palmyrah Development Board
- For an amount of Rupees Two Hundred and sixty five thousand (Rs.265,000.00)
- valid up to 07th August 2011

Pasupathy Seevarathnam,
Chairman,
Palmyrah Developement Board

(C-3035)

நம்மிடமுள்ள குறைகளை நீக்கிக் கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிர்ஷ்டமாகும். ~ கதே

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை அங்கும்; இங்கும் ஒரு பார்வை

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை தொடர்பில் ஆளும் தரப்பும், சிங்களமக்கள்சார்ந்த அரசியல்கட்சிகளும் போர்க்கொடி தூக்கியுள்ளன.

பாராளுமன்றத்தில் தேர்தல் பிரசாரங்களில் ஒருவரை ஒருவர் எதிர்த்துக் கொள்பவர்கள், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை எதிர்ப்பதில் ஒற்றுமைப்பட்டிருப்பதை தமிழ் அரசியல் தரப்புக்கள் ஒருகணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நிபுணர் குழுவின் அறிக்கையை எதிர்க்க அனைவரும் அணி திரளுங்கள் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த அதே கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி காலஞ்சென்ற ஆர்.பிரேமதாஸவின் மகனுமான சஜித் பிரேமதாஸவும் விடுத்துள்ளார்.

அதேசமயம் நிபுணர் குழுவின் அறிக்கை முழுக்கமுழுக்க இலங்கை அரசுக்கு எதிராகத் தயாரிக்கப்பட்டது என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

இதேபோன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கடுமையாக எதிர்த்துவரும் ஜே.வி.பியும் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு கண்டனம் தெரிவிக்கின்றது.

கூடவே அஸ்கிரிய பீடாதிபதியும் பௌத்தத்தின் பெயரால் அறிக்கையை தூற்றியுள்ளார்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை முழுமையாக எதிர்ப்பதில் ஆட்சியாளர்களும், பௌத்த பீடங்களும் சிங்கள மக்கள் சார்ந்த எதிர்க் கட்சிகளும் கங்கணம் கட்டி நிற்கின்றன.

இதுதான் அங்குள்ள ஒற்றுமை. அதனால் தான் அவர்கள் பலவற்றை சாதிக்க முடிகின்றது.

ஆனால் இங்கோ, ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை எவரும் ஆதரித்தோ! அல்லது ஐ.நாவின் அறிக்கையை எதிர்க்காமல் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஐ.நா. நிபுணர் குழு முன்வைத்த பரிந்துரைகளை அமுல்படுத்த இலங்கை அரசு முன்வரவேண்டும் என்றோ எவரும் கோரிக்கை விட்டதாகத் தெரியவில்லை.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அறிக்கை வெளியாகி சில தினங்கள் பொறுத்திருந்தேனும் அறிக்கையை ஆதரிப்பதாகக் கூறியுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

இதுபோல தமிழர் தரப்பில் இருக்கக்கூடிய அனைத்து அரசியல் தரப்புக்களும் தங்கள் கருத்தைத் தெரிவிக்கவேண்டும். அத்துடன் தென் பகுதியைச் சேர்ந்த மந்திரியதானிகளை வரவேற்று சந்திப்புக்களை நடத்துகின்ற சமயத் தலைமைகளும் மௌனம் சாதிக்காமல் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் அல்லவா? நடக்குமா?

# பிரிக்கப்படாத இலங்கையில் அரசியல் அதிகாரப் பரவலாக்கல் அமுல்படுத்தப்படவேண்டும்

## மனோ கணேசன் வலியுறுத்தல்

தமிழ் மக்களின் இதயங்களை வென்றெடுக்கக் கூடிய வகையில் அரசாங்கம் செயற்படவேண்டுமென ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வதன் மூலம் ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் சர்வதேச சமூகத்தின் சவால்களை இலகுவில் முறியடிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் அமைப்பின் கோரிக்கைக்கு தமிழீழ விடுதலைப்புலிகளை யுத்த ரீதியாக தோற்கடிக்கப்பட்டமை தீர்வாக அமையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களின் அபிலாசைகளை அடையாளம் கண்டு அதன் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசியமானது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அடிப்படை பிரச்சினைகளை அடையாளம் கண்டு இவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான முனைப்புக்கள் எடுக்கப்பட வேண்டுமென மனோ கணேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

யுத்தத்தின் பின்னரான காலப் பகுதிகளில் அரசியல் ரீதியான தீர்வு திட்டமொன்றை முன்வைப்பது மிகவும் அவசியமானது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான தீர்வு திட்டத்தை வழங்குவதனை மறுப்பதற்கு யுத்த வெற்றியை பயன்படுத்துவது புத்திசாதுரியமான அணுகுமுறையல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பிரிக்கப்படாத இலங்கையில் அரசியல் அதிகார பரவாலக்கம் அமுல் படுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்புடன் நடத்தப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகள் அரசியல் தீர்வு திட்டத்தை நோக்கியதாக நகர வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

## இரண்டு முகாம்களிலிருந்து 100 குடும்பங்கள் வெளியேறின

### வவுனியா அரச அதிபர் தகவல்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்களிலிருந்து கடந்த இரண்டு மாதங்களில் 100இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெளியேறிச் சென்றுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வெளியேறிச் சென்றுள்ள மக்கள் அவர்களின் சொந்த மாவட்டங்களில் பதிவுகளை மேற்கொண்டு தங்களுக்குத் தேவையான நிவாரணப் பொருட்களை அந்தந்த மாவட்டங்களிலேயே பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் அவர் கூறினார்.

வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்கள் மூடப்படவுள்ளதால் அங்கு தங்கியுள்ள மக்களை கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக அவரவர் சொந்த இடங்களுக்கு செல்லவேண்டும் என கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரே கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டதாக வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்திருந்தார். ஜனாதிபதி செயலணிப் பிரிவு இதற்கான அறிவித்தலை மாவட்ட செயலகத்திற்கு விடுத்துள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் முன்னர் குறிப்பிட்டிருந்தார்.

(ச-5)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



மரணம் நாளுக்கு நாள் நம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறது. சோம்பி இருக்க வேண்டாம். எது எது எப்பொழுது நடக்க வேண்டுமோ, அது அது அந்தக் காலத்தில், நடந்தேறும் என்ற பொய்யான எண்ணத்தினால் சும்மா இருக்காதீர்கள்! அப்படி எதுவும் நடக்கப்போவதில்லை.

நம்வாழ்நாள் குறுகியது. நாம் ஆசைப்படும் உலகப் பொருட்கள் நிலையற்றவை.அழிந்துபடும் இயல்புடையவை. ஆனால், தமக்காக வாழாது, பிறருக்காக வாழ்பவர்களே உண்மையில் வாழ்பவர்கள் ஆவர். பிறரெல்லாம் வாழ்ந்தாலும் வீழ்ந்தவர்களே, இறந்துபட்டவர்களே ஆவர்.

பிறரது உரிமையை மறுப்பவர்கள், உரிமையைப் பற்றிப் பேசவோ, உரிமையுடன் வாழவோ தகுதியுடையவர்கள் தானா? எனவே, பயனற்ற கோபத்திலும், எரிச்சல்படுவதிலும் நமது சக்தியை வீணாக்காது அமைதியோடும் ஆண்மையோடும் செயலாற்றுவோம்.



## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்



## (புனித புதன்)

### இயேசுவை உங்களுக்கு நான் காட்டிக்கொடுக்க; எனக்கு எதுவும் தரவேண்டாம் (மத் 26:14-25)

நாமும் நாம் வாழும் சமூகமும் அழிவதற்கு காரணம் சுயநலம் எனக் கூறலாம். எனக்கு என்ன இலாபம். எனக்கு என்ன தாருவார்கள். நானும் என்னுடையவர்களும் மட்டுமே வாழ வேண்டும். வளர வேண்டும். பணம் இதனுடன் சேரும் போது இந்த சுயநலத்திற்கு வலுவூட்டிவிடுகிறது. பணமும் சுயநலமும் எல்லாப்பழி பாவத்திற்கும் மூலமாகிறது எனலாம்.

பணத்திற்காக, சுயநலத்திற்காக பெற்ற தாயை, வளர்த்து உருவாக்கிய தகப்பனை, உறுதுணையாக இருக்கும் உடன் பிறப்பை, பெற்றெடுத்த பிள்ளைகளை ,ஒதுக்க ஒடுக்க ஒழிக்க மிக சாதரணமாக முன்வருவோர் இன்று இல்லையா? பணத்திற்காக ,பதவிக்காக ,பாதுகாப்பிற்காக அடுத்தவனை விலைபேசி ,தானும் விலை போகும் எட்டப்பன்கள் இன்று இல்லையா?

காட்டிக் கொடுத்தவன் வாழ்ந்ததாக வரலாறு இல்லை. சுயநலவாதி சுயம் கண்டதாக சான்று இல்லை. பணத்திற்காக பண்பை ,பண்பாட்டை ,பாசத்தை பரிதவிக்கவிட்டவன் பார் ஆண்டதாக பாரம்பரியம் இல்லை. கூட இருந்து குழி பறிக்கும் குள்ள நரிகள் கோட்டை காட்டியதாக கதையும் இல்லை. முதுகில் குத்தியதால் முகவரிபெற்றவர்களும் இல்லை. சந்தர்பவாதிகள் சரித்திரம் படைத்தாக அறிகுறிகளே அகிலத்தில் இல்லை.

ஆனால் காட்டிக் கொடுத்தவன் காட்டிக் கொடுக்கப்பட்டான்,கொல்லப்பட்டான் என்ற செய்திகள் செய்தித்தாள்களில் வரமலுமில்லை. விலைபேசியவன்விலை போனான் என்ற செய்திகள் விடுபடாமலுமில்லை. சுயநலவாதி, சந்தர்ப்பவாதி தன்னையே அழித்துக் கொண்டான், தற்கொலை செய்து கொண்டான் என்ற நிகழ்வுகள் நிஜங்களாகமலுமில்லை. காட்டிக்கொடுத்து சொத்து செல்வம்,பெயர்,புகழ் குவித்தவன் புவியில் நல்லா வாழ்ந்தாகவு மில்லை. 3 ஆவது நூற்றாண்டில் வாழ்ந்த விவிலிய அறிஞரான ஒறிஜின் கருத்துக் கூறுகையில் யூதாசு தலைமைக் குருவிடம் இயேசுவை உங்களுக்கு நான் காட்டிக் கொடுத்தால் எனக்கு என்ன தருவீர்கள்? என்று கேட்டதை சிந்தித்தால் அவன் முழு மனதுடனே திட்டமிட்டே முப்பது வெள்ளிக்காசுகளைப் பெற இறைவார்த்தையைக் கைமாறுகின்றான் என்பது புரியும் என்கிறார். இவ்வேளை இறைவனின் உண்மையிலும் அருளின் ஒளியிலும் நாம் எம்மை ஆய்வுசெய்வோம். இறைவனிடம் எம் இயலாமையை எடுத்துக் கூறுவோம்.

எம்மில் அவரது நம்பிக் கையை விசுவாசத்தை அன்பை திடப்படுத்த வேண்டுவோம்.எங்களை சோதனைகளில் விழாவிடாதேயும் தீமையிலிருந்து எங்களைக் காத்தருளும் (மத்6:3) என்று இயேசு கற்றுத்தந்த வார்த்தைகளை நம்பிக்கையுடன் என்றும் செபிக்கிறோளமா? எம்மையே நாம் கேட்டுப்பார்ப்போம்.

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.

## உயிராபத்து இருந்தபோதிலும் நிச்சயம் நாடு திரும்புவேன்

### முஷாரப் தெரிவிப்பு

தலிபான்கள் மற்றும் பிற பயங்கரவாதிகளிடம் இருந்து என் உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தாலும் நான் நிச்சயம் பாகிஸ்தானுக்குத் திரும்புவேன் என பாக். முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் லாகூர் நகரில் முஷாரப் பின் அனைத்து பாக். முஸ்லிம் லீக் கட்சி அலுவலகத்தில் வீடியோ மூலம் தன் தொண்டர்களிடம் முஷாரப் பேசியதாவது, நான் பலமுறை கொலை முயற்சிகளுக்கு ஆளாகியிருக்கிறேன். எந்த சம்பவத்தையும் எதிர்கொள்ள நான் தயாராகவே உள்ளேன். யாராலும் எனக்கு எந்தத் தீங்கும் செய்ய முடியாது. நிச்சயம் பாகிஸ்தான் திரும்பு வேன். யாரும் என்னைத் தடுக்க முடியாது. என் நாட்டு மக்களுக்கு நான் ஏதாவது செய்தாக வேண்டும் என முடிவெ டுத்திருக்கிறேன். இவ்வாறு முஷாரப் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# சிரியாவில் கலவரத்தை தூண்ட அமெரிக்கா நிதி உதவி செய்தது

## விக்கிலீக்ஸ் அம்பலம்

(வோஷிங்டன்)

அரபு நாடான சிரியாவில் ஜனாதிபதி பாஷார் அல்- ஆஷாத்துக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். கடந்த மாதம் 18 ஆம் திகதி தொடங்கிய போராட்டம் தற்போது வலுவடைந்துள்ளது. போராட்டத்தை ஒடுக்க இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது.

அதில் 8 பேர் பலியானார்கள். அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று முன்தினம் நடந்தது. அதில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். பெய்ரூட் நகரின் மையத்தில் உள்ள சதுக்கத்தில் அமர்ந்து போராட்டம் நடத்தினர்.

பாஷார் அல்- ஆஷாத் பதவி விலகும் வரை அங்கிருந்து கலைய மாட்டோம் என கூறி சதுக்கத்தில் அமர்ந்து கோஷங்களை எழுப்பி வருகின்றனர்.

இதனால் அங்கு போராட்டம் வலுவடைந்துள்ளது. இந்தநிலையில் அங்கு போராட்டம் நடக்க அமெரிக்காவே காரணம் என விக்கிலீக்ஸ் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது. அமெரிக்க தூதரகங்களின் ஆவணங்களை வெளியிட்டு வரும் விக்கிலீக்ஸ் இணையத்தளம் சமீபத்தில் சிரியா குறித்த தகவல்களை கசியவிட்டது.

அதில் சிரியாவில் கலவரத்தை தூண்ட எதிர்க்கட்சி தலைவர்களுக்கு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பண உதவி செய்தார். அத்துடன் ஜனாதிபதிக்கு எதிரான பிரசாரத்தை ஒளிபரப்ப லண்டனை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ஒரு தனியார் தொலைக்காட்சிக்கும் அவரது அரசு பண உதவி அளித்தது.

அதற்காக இரு தரப்பினருக்கும் மொத்தம் ரூ.30 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அந்த தனியார் தொலைக்காட்சி சிரியாவில் தனது ஒளிபரப்பை தொடங்கியது. அதன் எதிரொலியாகத்தான் தற்போது அங்கு கலவரம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.

மேலும் இதற்கான ஒப்பந்தம் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சுக்கும் சிரியாவின் எதிர்க்கட்சி தலைவருக்கும் இடையே கடந்த 2005 ஆம் ஆண்டு டமாஸ்கஸ்சில் ஏற்பட்டது. அவரது ஆட்சியில் வழங்கப்பட்டு வந்த நிதி உதவி ஒபாமாவின் ஆட்சியிலும் தொடர்கிறது. ஒருபுறம் கலவரத்தை தூண்டிக் கொண்டே மறுபுறம் சிரியாவுடனான உறவைப் பலப்படுத்துவது போன்று அமெரிக்கா நடிக்கிறது. கடந்த 6 வருடத்தில் கடந்த ஜனவரி மாதம் தான் முதன் முதலாக சிரியாவுக்கான தூதரை அமெரிக்கா நியமித்தது. இந்த தகவல் அமெரிக்காவில் இருந்து வெளிவரும் ஒரு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)




ஏமனில் ஜனாதிபதி சலே பதவி விலகுவது குறித்து சவுதி தலைநகர் ரியாத்தில் நடந்த பேச்சுவார்த்தையில் எவ்வித முடிவும் எட்டப்படவில்லை. இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சனாவில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலவரம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து ஜனாதிபதி சலே பதவி விலகக் கோரி டாயிஸ் நகரில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று பேரணி நடந்தது.




# சீனாவில் பயங்கர சூறாவளியில் சிக்கி பதினெட்டுப் பேர் பலியாகினர்

(பீஜிங்)



சீனாவின் தென் பகுதியில் நேற்று முன்தினம் பெய்த ஆலங்கட்டி மழை மற்றும் மேகவெடிப்பு, பயங்கர சூறாவளியில் சிக்கி 18 பேர் பலியாகினர்.

155 பேர் காயம் அடைந்தனர். சீனாவின் தென்பகுதியில் உள்ள குவாங்டாங் மாகாணத்தில் நேற்று முன்தினம் பயங்கர சூறாவளி வீசியது. அத்தோடு ஆலங்கட்டி மழையும் பெய்தது. குவாங்-ஷவூ, போஷன், ஷாவோகிங் மற்றும் டொங்குவான் நகரங்கள் இதில் பெரும் பாதிப்படைந்தன.

மணிக்கு 164 கி.மீ வேகத்தில் வீசிய புயலால் 45 வீடுகள் இடிந்து விழுந்தன. ஆயிரத்து 87 ஹெக்டேயர் பரப்பளவு வயல் வெளிகளில் பயிர் நாசம் அடைந்தன. 3 ஆயிரத்து 200 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகள் முழு வீச்சில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. புயல் மற்றும் மழையால் இப்பகுதியில் 66 கோடி ரூபாய் அளவுக்கு பொருளாதார இழப்பு ஏற்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ)

# புகுஷிமா அணுமின் நிலையத்தில் கடுமையான கதிர்வீச்சுத்தாக்கம்

## ரோபோக்களை அனுப்பி கண்டுபிடிப்பு


ஜப்பானின் புகுஷிமா அணுமின் நிலையத்தில் சேதம் அடைந்த அணுஉலை கட்டடங்களுக்குள் இரண்டு ரோபோக்கள் அனுப்பப்பட்டன. அதில் இரண்டு அணு உலைகளிலும் மனிதர்கள் உள்ளே செல்ல முடியாத அளவிற்கு கடுமையான கதிர்வீச்சு இருப்பது கண்டறியப்பட்டது. இதற்கிடையில் புதிய அணுமின் நிலையத் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் நவோட்டோ கான் அறிவித்துள்ளார்.

புகுஷிமா டாய் இச்சி அணுமின் நிலையத்தின் ஒன்று மற்றும் 3 ஆம் உலைகளில் அதிகளவு கதிர்வீச்சு வெளியாகி வருவதாக தெரிவிக்கப்பட்டது. அதனால் மனிதர்களை உள்ளே அனுப்ப முடியவில்லை.

அதற்குப் பதிலாக கடந்த 17 ஆம் திகதி இரண்டு ரோபோக்கள் அனுப்பப்பட்டன. அவற்றில் இருந்து எடுக்கப்பட்ட பதிவுகளில் இருந்து உள்ளே கதிர்வீச்சு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது.

எனினும் நான்கு உலைகளையும் மீண்டும் செயற்பாட்டிற்குக் கொண்டு வரும் திட்டத்திற்கு இந்த அதிகளவு கதிர்வீச்சு தடையாக இருக்காது. நாளடைவில் கதிர்வீச்சின் அளவு குறைந்து விடும் என டெப்கோ அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடந்த ஒரு கூட்டத்தில் உரை நிகழ்த்திய ஜப்பான் பிரதமர் நவோட்டோ கான், கதிர்வீச்சு பேரிடர் குறித்த முழு விவரங்கள் கிடைக்கும் வரையிலும் புதிய திட்டங்கள் முன்னெடுக் கப்பட மாட்டாது. அதேபோல் ஜப்பானின் அணு சக்திக் கொள்கையும் மறுபரிசீலனை செய்யப்படும் என்றார். (ஸ்ரீ-2)



அமெரிக்க தயாரிப்பான இந்த பேக்பாட் எனப்படும் ரோபோதான் புகுஷிமா அணுமின் நிலைய உலைகளுக்குள் அனுப்பப்பட்டுள்ளது. அடுத்தபடம் 3 ஆம் உலையின் கதவைத் திறக்கும் பேக்பாட் ரோபோ இப்படத்தை டெப்கோ நிறுவனம் வெளியிட்டுள்ளது.

# 15 அணுகுண்டுகளை விட அதிசக்தி வாய்ந்த எரிகல்

## பூமியை நோக்கி வருகிறது

(வோஷிங்டன்)

பூமியில் இருந்து சந்திரன் இருக்கும் தொலைவை விட 10 மடங்கு அதிகமான தொலைவில் அதாவது 20 இலட்சத்து 85 ஆயிரத்து 321 மைல் தொலைவில் ஒரு எரிகல்லை ஒரு வாரத்துக்கு முன்பு விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் பார்த்தனர்.

இதற்கு ஜி.பி.59 என்று பெயர். இது பூமியை நோக்கி வேகமாக பாய்ந்து வருகிறது.

இது பற்றி விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கூறுகையில்,

இதன் ஆற்றல் 15 அணுகுண்டுகளுக்கு சமமானது ஆகும். 164 அடி நீளம் உள்ள இந்த எரிகல் ஒரு சிறிய நாட்டை அழித்து விட கூடிய அளவுக்கு ஆற்றல் உள்ளது என்று விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

DLF IPL ஐ.பி.எல் கொண்டாட்டம்

ஏப்பிரல் 8 முதல் மே 28 வரை

# டெக்கான் சார்ஜர்ஸ் அசத்தல் வெற்றி டில்லி டேர் டேவில்ஸ் அணி சொதப்பல்



(டில்லி)

சொகால்,சங்கக்காரவின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லி டேர்டேவில்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் 10 அணிகள் மோதும் 4 ஆவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் டில்லியில் நேற்று நடைபெற்ற 19 ஆவது போட்டியில் சேவாக் தலைமையிலான டில்லி டேர்டேவில்ஸ் அணியும் சங்கக்கார தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணித்தலைவர் குமார் சங்கக்கார முதலில் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் களமிறங்கிய டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு சொகால்-டவான் ஜோடி ஆரம்பம் வழங்கினர்.

இதில் டவான் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக சொகாலுடன் இணைந்த சங்கக்கார அதிரடி ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தார்.

இந்த ஜோடி 63 பந்துகளில் 92 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது அணித்தலைவர் குமார் சங்கக்கார 35 பந்துகளில் (8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 49 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த வைற் சிறப்பாக ஆட மறுமுனையில் சொகால் 35 பந்துகளில் அரைச்சதம் பூர்த்தி செய்தார்.

எனினும் சணி சொகால் 41 பந்துகளில் (8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 62 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த கிறிஸ்ரியன் 8 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இறுதியில் வைற்றின் அதிரடியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 168 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் வைற் 25 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 31 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் டின்டா, இர்பான் பதான், ஹோப்ஸ், நடீம் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 169 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர்டேவில்ஸ் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.

இதில் அணித்தலைவர் சேவாக் 7 பந்துகளில் 3 பவுண்டரிகளை விளாசி 12ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சோபிக்கத் தவறினார்.

தொடர்ந்து களமிறங்கிய நாமன் ஓஜா 2 ஓட்டங்களுடனும் பின்ச் பூச்சியத்துடனும் ஆட்டமிழக்க டில்லி டேர்டேவில்ஸ் அணி 5.5 ஓவர்களில் 38 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்தது.

ஒரு முனையில் விக்கெட்டுக்கள் சரிந்தாலும் மறுமுனையில் டேவிட் வோர்னர் அதிரடியாக ஆடி ஆறுதலளித்தார்.

அடுத்து வோர்னருடன் இணைந்த வேணுகோபால் ராவ் சிறப்பாக ஆட டில்லி டேர்டேவில்ஸ் அணி சரிவிலிருந்து மீண்டது. இதில் வேணு கோபால் ராவ் 23 பந்துகளில்(3 பவுண்டரிகள்உட்பட) 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து இர்பான் பதான் களமிறங்க மறுமுனையில் டேவிட்வோர்னர் 44 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

எனினும் வோர்னர் 48 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க டில்லி டேர்டேவில்ஸ் அணியின் நம்பிக்கை தழர்ந்தது.

அடுத்து ஹோப்ஸ் களமிறங்க மறுமுனையில் இர்பான் பதான் 9 பந்துகளில் 5 ஓட்டங்களை எடுத்து வெளியேறினார்.

தொடர்ந்து வந்த நாகர் அதிரடியாக 11 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் உட்பட) 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் டில்லி டேர்டேவில்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையி ழந்து 152 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதன் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 5 ஆட்டங்களில்2 ஆவது வெற்றியைப் பெற்று 4 புள்ளிகளைப் பதிவு செய்தது.

துடுப்பாட்டத்தில் ஹேப்ஸ் 17, மோர்னி மோர்கல் 8, ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் சார்பாக கிறிஸ்ரியன், ஹமிற் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பிரக்கன் ஓஜா, அமித் மிஸ்ரா, டவான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் சொகால் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

## யுவராஜ் சிங்கின் அதிர்ஷ்ட தேவதை



(மும்பை)

அதிர்ஷ்ட தேவதை தன்னுடன் இருப்பதால் தான் உலகக் கிண்ணத்தை வெற்றிபெற முடிந்தது என இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் தெரிவித்திருந்தார்.

சச்சின் டெண்டுல்கர் தான் அந்த அதிர்ஷ்ட தேவதை என யுவராஜின் தந்தை ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார்.

ஆனால் அது யுவராஜ் சிங்கின் தோழி அக்ஷரா என தற்போது கூறப்படுகிறது. பெங்களூரைச் சேர்ந்த அக்ஷரா யுவராஜ் சிங் வசிக்கும் மும்பை பாந்த்ரா பகுதியிலேயே வசித்து வருகிறார். தற்போது அவர் சில இந்தி படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

அக்ஷரா யுவராஜ் சிங்கின் தோழி எனவும் யுவராஜ் சிங் வீட்டில் எப்போது கொண்டாட்டம் நடந்தாலும் விருந்தினர்களை வரவேற்பது உணவு ஏற்பாடு போன்றவற்றை அக்ஷரா முன்னின்று கவனிப்பார் எனவும் கூறப்படுகிறது.

சமீப காலமாக யுவராஜ் சிங் எங்கு சென்றாலும் அக்ஷராவும் உடன் செல்கிறார். இதனால் யுவராஜ் சிங்கின் அதிர்ஷ்ட தேவதை அக்ஷராவாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

## சட்டையைக் கழற்றி ஓடுவேன் -ஷாருக்கான்

2002 இல் இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் ஒரு நாள் தொடரை வென்ற மகிழ்ச்சியில் கங்குலி பனியனை கழற்றி சுற்றி மகிழ்ச்சியை தெரிவித்தது கிரிக்கெட் உலகில் பரபரப்பை ஏற்படுத்தியது.

தற்போது கொல்கத்தா அணியில் அவர் இல்லை. இருப்பினும் கொல்கத்தா அணி மே 28 ஆம் திகதி சென்னையில் நடைபெறும் ஐ.பி.எல் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்று அதில் வென்றால் கங்குலியைப் போல் சட்டையைக் கழற்றி மைதானத்தில் ஓடுவேன் என்று அணி உரிமையாளர் ஷாருக்கான் தெரிவித்துள்ளார்.




அப்போது எனது 8 பேக்ஸ் உடலைக் காட்டுவேன். எனது மார்பில் கொல்கத்தா சின்னத்தை பச்சை குத்தியுள்ளேன். அதையும் நீங்கள் பார்க்கலாம் என்று தெரிவித்தார்.

## புள்ளிப் பட்டியல்

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கொல்கத்தா | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +0.891 |
| ராஜஸ்தான் ரோயல்ஸ் | 5 | 2 | 2 | 0 | 1 | 5 | -0.476 |
| புனே | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +1.089 |
| மும்பை இந்தியன்ஸ் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +0.561 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | +0.073 |
| கொச்சி | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | +0.044 |
| சென்னை | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | -0.097 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | -0.478 |
| றோயல் சலஞ்ஜர்ஸ் | 5 | 1 | 3 | 0 | 1 | 3 | -0.730 |
| டில்லி | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.632 |

## இன்றைய ஆட்டங்கள்



# இலங்கை ஊடகங்களில்...

ஐக்கிய நாடுகள் அவை அலுவலகத்தில் செய்தியாளரிடம் பேசிய பர்ஹான் ஹக், ஊடகங்களில் வெளியானது ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பகுதிகளே. அவை உண்மையானவை ஆனால் அதுவே முழு அறிக்கையும் அல்ல என்று கூறியுள்ளார்.

ஐ.நா. நிபுணர் குழுவின் பரிந்துரை ஐ.நா. பொதுச்செயலாளரின் ஆய்வில் உள்ளது என்றும் இந்த வார இறுதிக்குள் வெளியிடப்படும் என்றும் கூறியுள்ளார்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை 196 பக்கக்களைக் கொண்டது. ஐ.நா. பொதுச்செயலாளருக்கு பரிந்துரைஅளிக்கப்பட இந்தஅறிக்கையை இலங்கை அரசின் பார்வைக்காக ஐ.நா. அளித்துள்ளது. அதன் முக்கிய பகுதிகள் கொழும்பு ஊடகங்களில் வெளியானது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தாகக் கருதப்படும் போர்க் குற்றங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை இவ்வாரத்தில் முறைப்படி வெளியாகவுள்ள நிலையில் இவ்வறிக்கையில் காணப்படும் சில விடயங்கள் முன்கூட்டியே இலங்கை ஊடகங்களில் வெளியானமை கவலையளிப்பதாக இருப்பதாகவும் ஐ.நா. செயலரின் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் இருந்து கசிந்த சில பகுதிகள் பத்திரிகையில் வெளியானமை ஐ.நாவுக்கு கவலையையும் அழுத்தத்தையும் அளித்துள்ளது. அவை ஐ.நா. தரப்பில் இருந்து கசிந்திருக்க முடியாது என்பதை உறுதிப்படுத்துவதுடன் இவ்வாறு கசிந்த அறிக்கையில் வெளியான விடயங்கள் குறித்து கருத்துக்கள் எதனையும் வெளியிட முடியாது எனவும் தெரிவித்தார்.

ஐ.நா. குழுவின் போர்க்குற்ற அறிக்கையை எதிர்த்துப் போராட வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருப்பது குறித்து கருத்துத் தெரிவித்த பர்ஹான் ஹக் எந்தவிதமான பதில் நடவடிக்கையின் போதும் இலங்கையிலுள்ள ஐ.நா. பணியாளர்களின் பாதுகாப்பை கவனத்திற் கொள்ள வேண்டும். அங்கு பணியாற்றுவோரின் பாதுகாப்பிற்கான முழுமையான பொறுப்பை இலங்கை அரசாங்கமே ஏற்கவேண்டும் எனவும் தனது அறிக்கை குறித்து இலங்கை அரசாங்கத்தின் கருத்தினைத் தான் எதிர்பார்ப்பதாகவும் அது இன்னமும் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ச-5)

# 12 அரச சார்பற்ற நிறுவனங்களு...

திருமதி இமெல்டா சுகுமாரும், கிளிநொச்சிமாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதிரூபவதிகேதீஸ்வரனும் எடுத்து விளக்கினர்.

இதன் போது 12 அரச சார்பற்ற நிறுவனங்கள் மட்டுமே அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுக்க அரசு அனுமதி வழங்கியுள்ளதாகவும் இதேவேளை அரச திணைக்களங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் துறைசார்ந்தோரால் எடுத்து விளக்கப்பட்டது.

நிறைவில் அண்மைய காலங்களாக வடபகுதிக்கு அதிகளவான உல்லாசப் பயணிகள் வருகை தருவதாகவும் அதனைக் கருத்தில் கொண்டு உல்லாசப் பயணிகளினதும், மக்களினதும் நன்மையை கருத்தில் கொண்டு யாழ். மாவட்ட அரச செயலகம் உல்லாசப் பயணிகளுக்கான வழிகாட்டல் நூல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

நூலின் முதல் பிரதியை யாழ். மாவட்ட அரசஅதிபர்திருமதி இமெல்டா சுகுமார் வெளியிட்டு வைக்க அதனை அமைச்சர் அவர்கள் பெற்றுக் கொள்ள தொடர்ந்து ஏனைய பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனையோருக்கும் நூலின் பிரதிகள் வழங்கப்பட்டன.

இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிவஞானம் சிறிதரன், சில்வெஸ்திரி அலென்ரின், யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, வட மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.ரங்கராஜா, வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கிளிநொச்சி அரச அதிபர் ஆர்.கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலை உதவிப் பணிப்பாளர் எஸ்.சிறிபவானந்தராசா, வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர்திருமதிஅவேதநாயகம், யாழ்.மாவட்ட பிரதேச செயலாளர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவி வழங்கும் வெளி நாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் கலைவசந்தி அரசரட்ணம் என பலரும் கலந்து கொண்டனர். (ச-5,6)


நெஞ்சை நெருடிய

2ஆம் ஆண்டு நினைவில்



அன்னை மடியில்

29

10

1987

ஆண்டவன் அடியில்

20

04

2009

அமரர் கனகநாதன் ஜனகன்

(மண்டைதீவு-01)

கார்மேகம் புடைசூழும்
ஐப்பசித் திங்கள் தனில்
நித்திலமாய் வந்துதித்த
ஆரமுதே! எங்கு சென்றாய்

கொடிய போர் வந்ததுவே-சிறு
குடிசையேனும் இல்லாமல்
நடுத்தெருவில் நாம் நின்றோம்
நிர்க்கதியாய் உனைப்பிரிய,

ஊர்விட்டு ஊர் சென்றோம்
பதுங்கு குழியே வாழ்க்கையானது
பொறுமையின்றி வெளியில் வருவாய் தம்பி
போடா! என்று அப்பா அதட்டுவார்

நாம் என்ன பாவம் செய்தோம் -இறைவா
எம் செல்வத்தை நிரந்தரமாய்ப் பிரித்துவிட்டாய்,
பத்துமாதம் உனைச் சுமந்த கருவறை கதறுகிறதே!
பாசத்தோடு சீராட்டிய தந்தையுள்ளம் துடிக்கிறதே!

கண்ணுக்கு இமைபோலே உனைத்
தவமிருந்து பெற்றோமையா
அப்பா, அம்மாவென்று அழைத்திட நீ வருவாயோ?
தப்பி வழி சென்றுவிட்டாய் பாவிநாம் என் செய்வோம்?

'தம்பி' என்று அழைத்து ஆசையுடன்
பாசம் எனும் கயிற்றால் கட்டுண்ட
தொப்புக்கொடி உறவுகள் உன் சகோதரிகள்
பொறுமையிழந்து துடிக்கின்றோம்-ஜனகா எங்கு சென்றாய்?

மாமா வருவாரென்று மருமக்கள் காத்திருக்க
மைத்துன உறவுகளும் உன் நகைச்சுவையை ரசித்திருக்க
எமை நீ பிரிந்து பறந்ததையா-ஈராண்டுகள்
ஆண்டாண்டு ஆனாலும் அகலாது உன் நினைவுகள்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உன் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்,
அப்பா, அம்மா, அம்மம்மா, சகோதரிகள், மைத்துனர்கள், மருமக்கள்.

மண்டைதீவு-01


# ஐ.நா. நிபுணர்கள் குழுவின்...

அரசாங்கம் தான் தீர்மானிக்க வேண்டும்.

ஐ.நா.அறிக்கை முதலாம் குற்றவாளியாக இலங்கை அரசாங்கத்தையும் இரண்டாம் குற்றவாளியாக விடுதலை புலிகளையும், மூன்றாம் குற்றவாளியாக ஐநா.அமைப்பையுமே அடையாளம் கண்டுள்ளது.

இலங்கையில் போர் நடைபெற்றபோதும் அதற்கு முன்னரும் பின்னரும் எதுவுமே முறைகேடாக இலங்கையில் நடைபெறவில்லை என்று கூறி எவரும் இனி தப்பித்துக் கொள்ள முடியாத நிலைமை இன்று உருவாக்கப்பட்டுள்ளது.

போர் நடைபெற்ற இறுதி நாட்களில் என்ன நடந்தது என்பது தொடர்பிலே உலகம் கேள்விகளை கேட்க தொடங்கியுள்ளது.

இதன் மூலம் போரினால் சொல்லொணா துன்பங்களுக்கு உள்ளாகியுள்ள தமிழ் மக்களுக்கு முழுமையான நீதியையும் சமாதானத்தையும் ஐ.நா.சபை உடனடியாக கொண்டுவந்து தந்துவிடும் என்று நாங்கள் கனவு காண முடியாது.

இது ஒரு விதமான ஆரம்பம். இதன் அடுத்து வரும் கட்டங்களை ஐ.நா. சபை தீர்மானிக்காது அவற்றை இலங்கை அரசாங்கமும், தமிழ் தலைமைகளும்தான் தீர்மானிக்க வேண்டும்.

வடக்குக் கிழக்கிலே வாழும் மக்களின் வாக்குகளை பெற்றுள்ள கூட்டமைப்புடன் அரசாங்கம் இன்று பேச்சுவார்த்தைகள் நடத்துகின்றது. இந்த பேச்சுவார்த்தைகள் விரைவில் தீர்வை நோக்கி செல்ல வேண்டும்.

பேச்சுவார்த்தைகளை காலங் கடத்தும் தந்திரமாக அரசாங்கம் கொண்டு நடத்துகின்றதா என்ற சந்தேகம் இன்று தமிழர் மத்தியில் ஏற்பட்டு வருகின்றது.

விடுதலைப் புலிகளின் இராணுவ தோல்வியை தமிழ் மக்களின் தோல்வியாக காட்டி முழு நாட்டையும் சிங்கள பௌத்த நாடாக மாற்றிடும் கொள்கையை இந்த அரசாங்கம் முன்னெடுக்கின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது. இவற்றுக்குரிய பதில்களை தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். (ச-5)

# பொன்சே...

வேண்டும். இல்லாது போனால் வெளிநாடுகள் அதை சுட்டிக்காட்டும். தேவையற்ற வகையில் எமது நாட்டு விவகாரத்தில் தலையிடும்.

தற்போது ஐ.நா.நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் நாம் அரசுடன் கை கோர்த்துக்கொண்டு செயற்பட தயார். ஆனால் அதற்கு முன்னர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படவேண்டும்.

இந்த யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சரத் பொன்சேகாவுக்குத்தான் நன்கு தெரியும். அவரை விடுதலை செய்தால் இந்த விவகாரம் தொடர்பில் அவரும் எம்முடன் இணைந்து செயற்படுவார் என்றார். (ச-5)


பிரண்ட்ஸ் இசைக்குழு

கொழும்பு அப்சராஸ் இசைக்குழுவின் பாடகர் R.ரகுநாதன், B.றீகன்றாஜ், A.கென்றி, முன்னணி அறிவிப்பாளர் G.ஜெஸ்ரின் டிமெல், வெளிநாடுகளிலும் புகழ்பெற்ற இசையமைப்பாளர் ஜேம்ஸ் அன்ரன் மற்றும் முன்னணி இசைக்கலைஞர்களின் ஒன்றிணைவில்,

யாழ். இசைக் குழுக்களின் முதல்வன் பிரண்ட்ஸ் இசைக் குழுவினரை உங்கள் விழாக்களில் அழைத்து மகிழலாம் நடனத்துடன் கவர்ச்சிகரமான இசை நிகழ்ச்சிகள் காத்திருக்கின்றன.

முந்துவோருக்கு முன்னுரிமை

0776366038

0776510375

(4635)

திருமண நல்வாழ்த்துக்கள்



இல்லறம் எனும்
நல்லறத்தில்
இன்று இணையும்
அருட்செல்வன் (B.A)
அன்பரசி (M.A)
தம்பதியினர் ஸ்ரீ வல்லிபுர
ஆழ்வாரின் அருள்பெற்று
சகல சௌபாக்கியங்க
ளுடனும் நீடூழி காலம்வாழ வாழ்த்துகிறோம்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார்
சுவாமிகள் கோவில்
பெரியாழ்வார் ஆச்சிரமம்

(C-3037)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.